


30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 30 | பாலம்: 09 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 01, 2020

# முன்வரிசைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு!

ஒன்ராரியோ மாகாண அரசு கொரோனா வைரஸின் தொற்றுக்கு எதிராகப் பணியாற்றும் முன்வரிசைத் தொழிலாளர் களின் ஊதியத்தை உயர்த்துவதாக 2020 ஏப்ரல் 25இல் அறிவித்துள்ளது. இந்த முன்வரிசைத் தொழிலாளர்களின் மணித் தியாலத்திற்கான சம்பளம் $4ஆல் அதிகரிக்கப்படுகிறது. இந்த அதிகரிப்பு அடுத்த 4 மாதங்களுக்கு தொடர்ந்து அமல்படுத்தப்படும்.

இந்த அதிகரிப்பிற்குத் தகுதி பெற்றவர் களாக நீண்டகாலப் பராமரிப்பு (Long-term care) இல்லங்கள், ஓய்வூதியர் பராமரிப்பு இல்லங்கள், அவசரகாலத் தங்குமிடங்கள், இளையோர் சீர்திருத்த நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் என்பனவற்றில் பணியாற்றுவோர் அடங்குகின்றனர்.

மருத்துவமனைகளில் பணியாற்றுவோர், வளர்ச்சிக் குறைபாடு உள்ளோர்களைப் பராமரிப்போர், அவர்களுக்கு ஆதரவு சேவைகளான துப்பரவு மற்றும் சமையல் வேலை செய்பவர்களும் இந்த அதிகரிப்புக்குத் தகுதி பெறுகின்றனர்.

இந்த $4 சம்பள உயர்வு "Pendemic Pay Premium" என அழைக்கப்படும். இது கொரோனா வைரஸின் தொற்றுக்கு எதிராகப் பணியாற்றும் முன்வரிசைத் தொழிலாளர்களின் அர்ப்பணிப்பு, அவர்கள் எதிர்நோக்கும் சுகாதார அபாயம் ஆகிய வற்றைக் கருத்திற் கொண்டு வழங்கப் படுவதாக ஒன்ராரியோ முதல்வர் Doug Ford ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இந்த $4 சம்பள உயர்வுடன் மாதம் ஒன்றுக்கு குறைந்தது 100 மணித்தியாலங் களாதல் இந்த முன்வரிசை தொழிலாளி பணியாற்றியிருந்தால் அவர் மேலதிகமாக மாதம் ஒன்றுக்கு $250 கொடுப்பனவும் பெறுவர். இந்த மாதாந்த கொடுப்பனவும்



அடுத்த நான்கு மாதங்களுக்கு வழங்கப் படும். இந்த இரண்டு அறிவிப்பாலும் வாரம்தோறும் 40 மணித்தியாலங்கள் பணி யாற்றும் ஒரு முன்வரிசைத் தொழிலாளி அடுத்த நான்கு மாதங்களில் மொத்தமாக $3,560ஐ மேலதிக ஊதியமாகப் பெறுவார். இந்த ஊதிய உயர்வு 2020 ஏப்ரல் 24இருந்து ஆரம்பமாகி அடுத்த 16 வாரங்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

ஒன்ராரியோ மாகாண அரசின் கருவூலப் பராமரிப்புச் சபைத் (Treasury Board) தலைவர் தெரிவிக்கையில் "ஒன்ராரியோ மாகாணத்தில் பணிபுரியும் 350,000இற்கு மேற்பட்ட முன்வரிசைத் தொழிலாளர் ஒன்ராரியோ மாகாண அரசின் இந்த இரண்டு அறிவிப்புக்களாலும் பலன் பெறுவர்" என்றார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் ஒன்ராரியோ மாகாணத் தலைவர் Andrea Horwath தெரிவிக்கையில் "மாகாண அரசு முன் வரிசைத் தொழிலாளர்களின் ஊதியத்தை ஏற்கனவே உயர்த்தியிருக்க வேண்டும். ஒன்ராரியோ முதல்வரிடம் இந்த ஊதிய அதிகரிப்புத் தொடங்கும் நாளை பின்னோக்கிப் போட வேண்டும் என நான் கேட்கிறேன். அதாவது முதல்வரால் ஒன்ராரியோ மாகாணத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட 2020 மார்ச் 17ஆம் திகதியில் இருந்து இந்த ஊதிய உயர்வு முன்வரிசைத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்" என்றார்.

ஒன்ராரியோ மாகாணத்தின் 60,000 சுகாதார சேவைப் பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சேவைகள் ஊழியர் சர்வதேச ஒன்றியம் (Services Employees International Union) இந்த ஊதிய அதிகரிப்பு COVID-19 ஒரு சர்வதேச தொற்று நோய் பரவல் (Pandemic) என அறிவித்த நாளில் (2020 மார்ச் 11) இருந்து தொடங்க வேண்டும் என்று கேட்டுள்ளது.

முன்வரிசை தொழிலாளர்களுக்கு ஊதிய அதிகரிப்பு வழங்க ஏன் தாமதம் ஆனது என்ற ஊடகவியலாளரின் கேள்விக்கு பதில் அளித்த முதல்வர் Doug Ford "முதல் நாளில் இருந்தே முன்வரிசைத் தொழிலாளர்களின் ஊதியத்தை அதிகரித்திருக்க வேண்டும் என்பது எனது விருப்பமாகவும் இருந்தது. ஆனால் ஒன்ராரியோ மாகாண அரசிற்கு அவ்வாறான வசதிகள் இருக்கவில்லை. மத்திய அரசு எமது இவ்வாறான முயற்சிக்கு நிதி உதவி வழங்கிய பின்னரே எங்களால் இதனைச்

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)





























EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in-Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com
www.soldbythas.com
Kennedy / Hwy 401
$499,000
Condo Apt. - 2BR + 2WR
Simcoe St N / Winchester Rd E
$469,000
Townhouse - 2BR + 3WR
9th Line / Hwy 7 - Markham
$524,999
Townhouse - 2BR + 2WR
Hwy 7/ Pine Valley Dr -Vaughan
$528,800
Condo Apt. - 2BR + 1WR
Eglinton & Danforth - Toronto
$539,000
Condo Apt. - 2BR + 1WR
Major Mackenzie/Via Campanile
$1,299,000
Detached 4-BR/3WR
108 Corporate Dr.- Toronto
$230,000
Commercial
582 Danforth Rd -Toronto
$34,000
Retail/ Office/ Food


அம்மா
Amma Pawn Broker
தங்க நகை அடைவு மாடம்
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி
செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை
உங்கள் பழைய நகைகளை
அதியுயர் பெறுமானத்திற்கு
எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்
உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும்
மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள
நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்
105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள்
Shankar& Co. வுக்கு அருகாமையில் உண்டு
1.5% முதல்
2.0%
வட்டி மட்டுமே
(per month)
416-757-0034
416-994-3861
எவ்வளவு தொகையானாலும்
மிகக் குறைந்த வட்டியுடன்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

# முன்வரிசை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

செயல்படுத்த முடிந்தது" என்றார்.

ஒன்ராரியோ மாகாண அரசின் கொரோனா வைரஸ் பரம்பலைக் குறைப்பதற்காக எடுத்த பிரயாணத்தவிர்ப்பு, வீட்டில் இருந்து பணியாற்றுதல் போன்ற நடவடிக் கைகளுக்கு எதிராக 200 பேர் வரையில் ஒன்ராரியோ சட்டசபைக்கு முன்னால் ஏப்ரல் 25இல் பதாகைகளுடன் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அவர்கள் மாகாண அரசை இவ்வாறான தடைகளை நீக்கிவிடுமாறும் தொழிற்சாலைகள் மற்றும்



வணிக மையங்களைத் திறந்து பொருளாதார வளர்ச்சியை மீண்டும் ஆரம்பிக்குமாறும் கோசம் எழுப்பினர்.

இது தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த முதல்வர் "இவர்கள் முற்றிலும் பொறுப்பற்றோர், இவர்கள் சட்டத்தை மீறி அனைவரையும் ஆபத்துக்கு உள்ளாக்குகின்றனர். தங்களையும் பாதுகாக்கவில்லை, மற்றவர் களையும் ஆபத்துக்கு உள்ளாக்குகின்ற னர். இவர்களில் ஒருவருக்கு இந்நோய் வந்து மருத்துவமனையில் இருக்காமல் கடவுள்தான் காக்கவேண்டும்" என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் "பெரும் பான்மையான ஒன்ராரியோ மாகாண மக்கள் தமது வீடுகளிலேயே தங்கி இருப்பதன் மூலமும், ஒருவருக்கொருவர் இரண்டு மீற்றர் இடைவெளியைப் பேணுவதன்மூலமும் ஒன்ராரியோ மாகாணத்தில் கொரோனா வைரஸின் பரம்பலின் வேகத்தைக் குறைக்கின்றனர்" என்றார்.

மாகாணத்தில் பொருளாதார வளர்ச்சியை மீண்டும் ஆரம்பிக்க மற்றவர்களைவிட தானே முதலில் விரும்புவதாகக் கூறிய முதல்வர் Doug Ford, "பொருளாதாரத்தின் பொருட்டு எமது மக்களை ஆபத்தில் ஆழ்த்த நான் விரும்பவில்லை. பொறுமை யாக இருங்கள், அந்த நிலைக்கு நாங்கள் விரைவில் செல்வோம்" என்று மக்களைக் கேட்டார். முதல்வரின் கருத்துக்குத் தனது ஆதரவைத் தெரிவித்த ரொறொன்ரோ நகர முதல்வர் John Tory தடைகளை எடுத்துப் பொருளாதார வளர்ச்சியை விரைவில் ஆரம்பிக்க விரைவான வழி, மக்கள் எல்லோரும் தற்போது தமது வீட்டிலேயே இருப்பதுதான் என்றார்.

நகர முதல்வர் மேலும் தெரிவிக்கையில் "நகரத்தைப் பூட்டி எல்லோரையும் வீட்டிற் குள் அடைத்து வைத்திருப்பது எவ்வளவு வெறுப்பான செயல் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். நிலைமை பாது காப்பானவுடன் உடனடியாக நகரத்தை மீண்டும் திறக்க விரும்புகிறேன். ஆனால் அதைச் செய்ய இந்த வைரஸ் பரம்பலைக் கட்டுப்படுத்த வேண்டும். இது மிகவும் கொடிய வைரஸ். இதிலிருந்து மக்களின் உயிரைக் காப்பாற்றுவது முதலில் முக்கியம்" என்றார்.

2020 ஏப்பிரல் 27வரை ஒன்ராரியோ மாகாணத்தில் COVID-19 நோயால் இறந்த 948 பேரில் 95%ஆனோர் 60 வயதுக்கு மேற்பட்டோர். இதில் 80 வயதுக்கு மேற் பட்டோர் மட்டும் 68% ஆகும். இதைவிட ஒன்ராரியோ மாகாணத்தில் COVID-19 நோயால் இறந்தோரில் பெரும்பாலானோர் நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்களில் வாழ்ந்த முதியோர் ஆவர். இவ்வாறு நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்களில் மட்டுமே இறந்தோரின் எண்ணிக்கை ஒன்ராரியோ மாகாணத்தில் இறந்தவர் களில் 78% ஆகும்.

ஒன்ராரியோ மாகாண அரசு கனேடிய மத்திய அரசிடம் இருந்து இராணுவ உதவியை நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்களைப் பராமரிக்க 2020 ஏப்பிரல் 22இல் கோரியிருந்தது. மாகாண முதல்வர் Doug Fordஇன் வேண்டுகோளுக்கிணங்க ஏப்பிரல் 24இல் இராணுவ உதவி Pickering நகரிலுள்ள Orchard Villa நீண்ட காலப் பராமரிப்பு இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மாகாண முதல்வர் Doug Ford இராணுவ உதவியை ஒன்ராரியோவிலுள்ள ஐந்து நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்களுக்குக் கேட்டிருந்தார். ஏனைய நான்கு நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்களும் பின்வருமாறு: Eatonville Care Centre-Etobicoke, Altamont Community Care Centre -Scarborough, Hawthorne Place Care Centre - North York, Holland Christian Homes Grace Manor- Brampton.



ஒன்ராரியோ மாகாணத்தில் அரச பொதுப் பாடசாலைகள் மே 31வரையும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என ஒன்ராரியோ மாகாணக் கல்வி அமைச்சர் Stephen Lecce ஏப்பிரல் 26இல் அறிவித்தார். பாடசாலைகள் மார்ச் விடுமுறை ஆரம்பித்த மார்ச் 16ஆம் திகதியில் இருந்து மூடப்பட்டுள்ளன.






அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!

முற்றிலும் இலவசமான சேவை!

12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.



AATEK HEATING & COOLING

$2100 Rebate Available Now
call us 416-414-2280



- FREE Inspection in GTA
- Over 10 yrs in Business Experience
- Flat Rate Pricing
- Parts and Labour guarantee
- Guaranteed Repairs
- Professional Service
- Fully Insured

Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install

10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின் முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்துடன்

Licensed Technician | ELENGO THIYAGARAJAH

ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com

We Are Specialists in customs homes Ductwork System

We Are Professional trouble shooters for all major gas appliances

416.414.2280



Alexander Immigration Services

Hemalatha K. Alexander, RCIC
Commissioner of Oaths
Canadian Government Licensed Immigration Consultant

- Express Entry
- Study Permit
- Visitor Visa
- Super Visa
- Citizenship
- LIMA & work Permit**
- Federal Skilled Workers
- Federal skilled Trades
- Canadian Exp. Class
- Business Immigration
- Provincial Nomination
- Family Sponsorship
- Visa extensions, renewal & more service

நிரந்தர குடியிருப்பு, விசா, குடியுரிமை மற்றும் பல சேவைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்

ஆலோசனைக்கு இன்றே அழையுங்கள்

647-773-3673

email: info@alexanderimmigration.ca
web: www.alexanderimmigration.ca

வசதியான புதிய முகவரியில்

GTA Square
5215 Finch Ave. East Suite 261,
Toronto ON M1S 0C2

10 Milner Business Court
Suite 300,
Toronto, ON M1B 3C2

** Kindly note we do not provide Canadian jobs


# மனம் மகிழ வந்ததே 'மே'தினம்

குப்பை மேட்டைக் கோபுரமாக்கிடும்
குறைவறுவித்தை கற்றவன்தொழிலாளி
உப்பையுறைப்பை உணவில்சேர்த்து
உருசியானஉணவு தருபவன்தொழிலாளி
தப்பைத்தலையில் திருத்திமுகச்
சவரம்செய்து தருபவன்தொழிலாளி
எப்பவும் நகரினைச் சுத்தம்செய்தே
எழிலினைக் காப்பவன்தொழிலாளி!


நாளுமுழைப்பான் ஆயினும்வீட்டில்
நலிந்துகிடப்பான் நாயினும்கீழாய்
தேளும்பூரானும்நிதம் நுழையும்வீட்டில்
தென்றலும்நிலவும் நிழையாவீட்டில்
ஆளும்அவலமும் வாழும்வீட்டில்
ஆளுமையோடு வீழ்ந்துகிடப்பான்
சூழும்வறுமையால் சுழன்றுவருபவன்
சுகம்பெற மலர்ந்ததே 'மே'தினம்!

உடல்வருத்தி உழைத்தாலும்நாளும்
உண்ணவோ உடுக்கவோவழியின்றி
குடல்கருகிக் கும்பிவாடிக்கிடந்த
குற்றமிலாத் தொழிலாளர்வாழ்வில்
கடல்மீது துள்ளியெழும் வெள்ளலைபோல்
கவினுறவந்ததே இந்த 'மே'தினம்
மடல்மீது கொட்டிய வெண்பனிபோல்
மனம்மகிழ வந்ததே 'மே'தினம்!

உலகெலாம் வாழும்தொழிலாளர்
உவந்து மகிழ்ந்திடும் 'மே'தினம்
நலமெலாம் கொண்டுசேர்த்ததே
நலிவுடன் வாழ்ந்தோர்தமக்கு
பலமெலாம் தந்தது பாரினில் சீர்பெறும்
பக்குவம் தந்தது பலனையும் தந்தது
நிலவொளி படர்ந்தநிலமகள்போல்
நிறைவுடன் வந்ததே 'மே'தினம்!



01.05.2020 தொழிலாளர் தினம்



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)
- லைன் ஒப் கிரெடிட் (HELOC)
- Private 1st Mortgage
  (No Income Verification)
- ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்
- 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்
வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது



**Cell : 416-624- 4843**
416-613-2788 / 416-816-9011

ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP
Team Leader / Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# இலங்கையை அதிகமாக அச்சுறுத்தும் கொரோனா!

**– விகிர்தன் –**

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானோரின் தொகை கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகின்ற நிலையில், நாட்டில் மிக விரைவாக இயல்பு நிலை தோன்றலாம் என்கின்ற நம்பிக்கை சந்தேகத்திடமாகியுள்ளது.

நாள் தோறும் புதிய நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றனர். திடீரென நோயாளர் எண்ணிக்கை அதிகரித்தமைக்குக் காரணம் படையினருக்கு இந்த தொற்று விரைவாகப் பரவி வருகின்றமையே ஆகும். கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதியிலிருந்து 29ஆம் திகதி வரையிலான ஒரு வார காலப்பகுதிக்குள் 311 போர் கொரோனா தொற்றுள்ளவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 235 பேர் இலங்கை கடற்படையினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இராணுவம் மற்றும் அதிரடிப்படையினர் சிலருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இலங்கையில் கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு வந்துள்ளனர். ஆனால், கடந்த ஒரு வார காலத்திலேயே இவ்வாறு நோயாளிகள் அதிகரித்துள்ளனர். காரணம் படையினருக்குத் தொற்று ஏற்பட்டதால் அது மிக வேகமாக ஏனைய படை வீரர்களுக்கும் பரவியுள்ளது.

பாடசாலைகள், அலுவலகங்கள் உள்ளிட்ட மக்கள் கூடும் அனைத்து இடங்களும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள நிலையில் படை முகாம்களை அவ்வாறு மூட முடியாது. அவர்கள் மத்தியிலான இடைவெளியினை மேற்கொள்வதும் சாத்தியமற்றது. எனினும், அவர்களுக்கான சிறப்பு பாதுகாப்பு ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தியிருந்தால் இவ்வாறான வேகமான பரவலைத் தடுத்திருக்கலாம்.

குறிப்பாக அவர்களின் விடுமுறைகளை தடைசெய்திருக்கலாம். விடுமுறையில் வீடுகளுக்குச் செல்லும் படையினர் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்கும் செல்வது வழக்கமானது. இன்று கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டுள்ள படையினர் சென்ற வீடுகளிலுள்ளோர் அனைவரும் அடையாளம் காணப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் தொழில்புரிந்த இடங்களும் மூடப்பட்டுள்ளன.



தற்போது விடுமுறையில் சென்ற படையினர் அனைவரும் மீள அழைக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். பலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். படைத் தலைமை இவ்விடயம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தியுள்ளதால் நாளடைவில் இப்பிரச்சினை தளர்வு நிலைக்குக் கொண்டுவரப்படும் என நம்பலாம்.

நாட்டில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்டு நாடாளுமன்றத் தேர்தல் குறித்தொரு நாளில் நடத்தப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தது. தற்போது தேர்தல் தொடர்பாக எந்தவொரு முடிவையும் மேற்கொள்ள முடியாத நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. உண்மையில் உடனடியாகத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் தற்போது ஆளுகின்ற தரப்பிற்கே மக்கள் ஆதரவு அதிகமிருக்கும் என்பது பலரின் எதிர்வுகூறலாக உள்ளது.

கொரோனா பரவல் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கத்திற்கு நல்லதொரு வாய்ப்பையே வழங்கியிருக்கின்றது. கோத்தபாயவை விரும்பாதோர் கூட அவர் தலைமையிலான கொரோனா முகாமைத்துவத்தைப் பாராட்டுகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர் “மைத்திரி-ரணில் அரசாங்கம் இருந்திருந்தால் இந்தக் கொரோனா தடுப்பு விடயத்திலும் வெவ்வேறு நிலைப்பாட்டை எடுத்திருப்பர். அந்த இழுபறியில் வேகமாகக் கொரோனா தனது வேலையைக் காட்டியிருக்கும்” என்று பகிடியாகக் கூறினார். மக்கள் இப்படித்தான் கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

கொரோனா வைரஸ் உலகம் முழுவதையும் அச்சுறுத்திவரும் நிலையில், இலங்கையில் அதன் பாதிப்புக் குறைவானதே. அதனால், தேர்தலை நடத்துவதில் பிரச்சினை இல்லை. கோத்தபாய அரசாங்கம் கொரோனாவை முன்னிறுத்தி தனது அரசியலை முன்கொண்டு செல்கின்றது என்கின்ற குற்றச்சாட்டை எதிர்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் இப்போது, தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவே தீர்மானிக்கும் என்றும், தேர்தல் ஒன்றை நடத்துவது பாதுகாப்பானதா என்பது குறித்து சுகாதார, மருத்துவத் துறையினரின் ஆலோசனைகளின்படி தீர்மானம் எடுக்கப்படும் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ கூறியிருக்கின்றார். இதனால், தேர்தலை முன்னிறுத்தி அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தும் வேகம் எதிர்கட்சிகள் மத்தியில் குறைந்துள்ளது. அரசாங்கத்திற்கு இந்த சந்தர்ப்பத்தில் அரசியல் உள்நோக்கம் எதுவும் இல்லை என்றும் கூறிவிட முடியாது.

ஆனாலும், படையினருக்குக் கொரோனா தொற்றுப் பரவியதை வைத்து தற்போது ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசாங்கத்தை குறைகூறி வருகின்றனர். படையினர் தொடர்பில் அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை என அவர்கள் கூறுகின்றனர். ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ தொடக்கம் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி வரை அவர்களால் குற்றம் சாட்டப்படுகின்றனர்.

நாடு முழுவதும் நடைமுறையிலுள்ள ஊரடங்கு சட்டத்தை நீக்க முடியும் என கடந்த 18ஆம் திகதி சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி குறிப்பிட்டிருந்தார். ஆனால் தற்போது கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என அவர்கள் கூறுகின்றனர். இதேவேளை, ஒரு மாதத்திற்கு நாடு முழுவதையும் முடக்க வேண்டும் என்று மற்றுமொரு ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் கூறுகின்றார். இவையெல்லாம் அரசியல் உள்நோக்கத்துடன் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் அதே வேளையில் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. நாடு ஒரு மாதத்திற்கு முடக்கப்படுமானால் அதனால் பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுவர். தற்போது ஊரடங்கு தளர்த்தப்படுகின்ற பகுதிகளிலுள்ள மக்கள் ஓரளவிற்கு நாளாந்த தொழில்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

கொரானா பரவலுக்கு முகம் கொடுக்கின்ற உலக நாடுகள் பல பொருளாதாரத்திற்கு முகம் கொடுக்கும் விதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமையினையும் காண முடிகின்றது. சீனா- பீஜிங்கில் கொரோனா சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட மருத்துவமனைகள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தளவிற்கு அந்நாட்டில் உருவான கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா தொற்றால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான இத்தாலியில் மே மாதம் தொடக்கம் இயல்பு நிலை ஏற்படுத்தப்படும் என்றும் வணிகம், உற்பத்தி மற்றும் கட்டுமானப் பணிகள் யாவும் ஆரம்பிக்கப்படும் என்றும் அந்நாட்டு பிரதமர் அறிவித்துள்ளார். இத்தாலியில் 1.97 இலட்சம் பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 26,644பேர் இந்நோயினால் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 64,928பேர் வரை இதுவரை குணமடைந்துள்ளர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிகம் பாதிக்கப்பட்ட வேறு சில நாடுகளும் தங்கள் நாடுகளில் இயல்பு நிலையை தோற்றுவிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதோடு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான ஏற்பாடுகளும் சம காலத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். நீண்ட காலத்திற்கு மக்களை முடங்கல் நிலையில் வைத்திருக்க முடியாது. வறிய மக்கள் பட்டினியால் உயிரிழக்கும் நிலையை தடுத்து நிறுத்தும் வேலைத் திட்டங்கள் மிக அவசியமானது.

இலங்கையில், தற்போது சடுதியாக அதிகரித்துள்ள கொரோனா தொற்றாளர்கள் படையினராகவே காணப்படுகின்றனர். இவர்களிலிருந்து இது மக்களுக்குத் தொற்றாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



இலங்கையில் கொரோனா தொற்றாளர்கள் நூற்றுக்கணக்கில் அதிகரித்திருந்தாலும் அதனால் உயிரிழந்தோர் 07 பேர் மட்டுமே. அதுமட்டுமன்றி பலர் பூரண குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். அந்த வகையில் திருப்தியடையலாம். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மேலும் முன்னேற்றகரமாக அமைவதோடு, பொது மக்களும் சுகாதாரத்துறையினர்- மருத்துவர்கள் கூறும் வழிமுறைகளை சரியான முறையில் ஏற்று நடப்பார்களானால் இலங்கையில் கொரோனா தொற்றை விரைவில் பூரணமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

விளம்பரம்
VLAMBARAM
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email: vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved



# சர்வதேச பொருளாதாரத்தில் சீனாவின் ஆதிக்கம், வல்லரசு நாடாக உருவெடுக்குமா?

உலகின் பொருளாதாரத்தை, மக்களின் அன்றாட வாழ்க்கை முறையை கொரோனா என்கிற ஒற்றைச்சொல் மாற்றி அமைத்திருக்கிறது. இந்த வார்த்தைக்கு முன்னால் மனித சமூகம் இன்றைய நிலவரப்படி மண்டியிட்டு இருக்கிறது. இந்தத் துயரத்தை மனித சமூகம் நிச்சயமாகக் கடந்து வந்துவிடும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் கொரோனா என்ற வைரஸால் உலகில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம் அசாத்தியமானது. ஐரோப்பிய நாடுகளையும் அமெரிக்காவின் பொருளாதாரத்தையும் மிஞ்சி ஒரு நாடு தலை எடுக்க முடியுமா என்ற கேள்வி கிட்டத்தட்ட அரை நூற்றாண்டாக விடை தெரியாமல் இருந்து வந்தது. கொரோனாவை வைத்து வல்லரசு என்ற ஆதிக்க வளையத்திற்குள் சத்தமின்றி நுழையக் காத்திருக்கிறது சீனா. அமெரிக்க ஐரோப்பியப் பொருளாதாரங்கள் ஆட்டம் கண்டிருக்கும் சூழலில் சீனா வல்லரசு நாடாக உருவெடுத்துள்ளதா? கொரோனா வின் பின் சீனாவின் பொருளாதாரத்தைச் சார்ந்துதான் உலக நாடுகள் இயங்க வேண்டுமென்ற கட்டமைப்பு ஏற்பட்டிருக்கிறதா? கொரோனா என்கிற வைரஸ் மூலமாக சீனா இந்த இடத்தை அடைந்ததா? அல்லது இதற்கு முன்பாகவே அந்த இடத்தை அடைவதற்காக வியூகத்தை சீனா உருவாக்கிக் கொண்டதா? சீனாவை எதிர்த்து அமெரிக்கா தற்போது மட்டும்தான் நிற்கதியாக நிற்கிறதா? Xi Jinpingஇன் வியூகத்தில் அமெரிக்க அதிபர் Donald Trump அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறாரா?

அதிபராக Trump பொறுப்பேற்றது முதலே தவறான காய்களை நகர்த்தி அமெரிக்கா மட்டுமல்லாமல் ஐரோப்பிய நாடுகளையும் நிர்க்கதியாக்கி வல்லரசு என்ற வாய்ப்பைச் சீனாவுக்கு அளித்துவிட்டாரா என்று அடுக்கடுக்கான பல கேள்விகள் விடை தெரியாமல் தொக்கி நிற்கின்றன. எது எப்படி இருப்பினும் இனிவரும் காலங்களில் சீனாதான் வல்லரசு நாடு என்று சில பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். அவர்களின் கூற்றுப்படி பார்த்தால் இந்தத் திசை மாற்றம் எப்படி நிகழ்ந்தது என்பதை அறிந்துகொள்ளக் காலச்சக்கரத்தில் சில ஆண்டுகள் பின்னோக்கிப் பயணிக்க வேண்டியிருக்கிறது.

2010ஆம் ஆண்டில் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டி அளித்த Trump, சீனா நமக்கு ஒரு தந்திரம்மிக்க போட்டியாளராகவும் நமது வேலை வாய்ப்புகளை திருடிக் கொள்ளும் நாடாகவும் உள்ளதாகக் கடுமையாக விமர்சித்துப் பேசினார். இனிவரும் காலங்களில் வல்லரசு என்ற நிலையை அமெரிக்கா தக்கவைக்க வேண்டுமென்றால் சீனாவுடன் நாம் வர்த்தக யுத்தம் நடத்த வேண்டும் என்றும் சீனாவுடன் நாம் எவ்வித வர்த்தக உறவும் வைத்துக்கொள்ளாமல் இருந்தால் நம்மால் ஏராளமான டொலர்களை சேமிக்க முடியும் என்றும் பகிரங்கமாகவே அறிவித்தார்.

சீனா குறித்த Trumpஇன் இந்த வார்த்தைகள் அடுத்தடுத்த காலங்களில் பல படிகள் முன்னேற்றமடைந்து சீனாவின் பொருளாதாரத்தையே நிர்மூலமாக்கும் வியூகம் தன்னிடம் உள்ளதாகக் காட்டிக் கொண்டார் Trump. இதைத்தொடர்ந்து அமெரிக்காவை தோற்கடித்து அவரை தனக்கு சொந்தமாக்கிக் கொள்ள சீனா விரும்புகிறது என Twitterஇல் 2011இல் குறிப்பிட்டார். 2016ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டமொன்றில் ஆவேசம் பொங்கப் பேசிய Trump, சீனா பின்பற்றும் வர்த்தக நடைமுறைகள் குறித்துக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார். சீனா எங்கள் தேசத்தை சூறையாடுவதை இனியும் அனுமதிக்க முடியாது என்று அதிரடியாகக் கூறினார். Trumpஇன் அந்த உரையைக் கேட்ட அமெரிக்கர் பலரும் தங்கள் நாட்டை வல்லரசு நாட்டிலிருந்து அடுத்த நிலைக்கு உயர்த்திச் செல்ல ஒரு தூதுவன் வந்து விட்டான் என்றுதான் நினைத்திருந்தனர். ஆனால் நிலையோ தலைகீழாக மாறியது

அமெரிக்க அதிபராக Trump பதவியேற்ற நாளிலிருந்து சீனா குறித்த அவர் பார்வையே மாறிப்போனது. குறிப்பாக வரலாற்றில் சீனா அடைந்திருக்கும் இந்த உயரம் அசாத்தியமானது எனப் புகழ்ந்து தள்ளினார். எந்தச் சீனாவின் பொருளாதாரத்தை அதிபர் Trump விமர்சித்தாரோ அதே Trump சீனாவின் பொருளாதார உயர்வை உயர்த்திப் பேசியதை அமெரிக்கர்கள் கோபத்துடன் தான் பார்த்தனர்.

இந்தச் சூழலில்தான் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 19ஆவது மாநாட்டில் Xi Jinping மீண்டும் ஐந்தாண்டு காலத்திற்கு அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலகின் அதிகாரமிக்க தலைவராக Xi Jinping உயர்ந்து வருவதாக ஊடகங்கள் அவரை புகழ்ந்தன. அதற்கேற்ப வட கொரியா விவகாரம், தைவான் அரசியல் விவகாரத்தில் Xi Jinping செய்த மத்தியஸ்தமும் அமெரிக்காவின் தலையீட்டிற்கு எதிராக மௌனமாகக் காய் நகர்த்தியதிற்கும் அமெரிக்காவால் எதிர்த்துப் பேசவே முடியவில்லை. இதற்கு முகாந்திரம் இல்லாமல் இல்லை.

அமெரிக்காவின் பொருளாதாரத்தை கட்டுப்படுத்தும் கேந்திரமாக உருவெடுத்திருக்கிறது சீனா. மற்ற நாடுகளின் கடன் பத்திரங்களை அதிகம் வைத்துள்ள நாடாகச் சீனா உருவெடுத்துள்ளது. அதிலும் குறிப்பாக அமெரிக்காவின் கடன் பத்திரங்கள் தற்போதைய சூழலில் சீனா வசம் உள்ளன. இந்நிலையில்தான் சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே



வர்த்தகப் போர் ஏற்படும் சூழல் கடந்த 2018ஆம் ஆண்டு ஏற்பட்டது. சீனாவின் இறக்குமதிப் பொருட்களுக்கான வரியை அமெரிக்கா திடீரென உயர்த்த முடிவு செய்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சீனாவும் 1.1 ட்ரில்லியன் கடன் பத்திரங்களை விற்பதாக விரட்டியது. அமெரிக்காவின் பத்திரங்கள் விற்பதனால் அமெரிக்காவின் நிதிச் சந்தையை மட்டுமன்றி உலக நிதிச் சந்தையையும் அது சீர்குலைக்கும். வட்டி வீதங்கள் வரலாறு காணாத வகையில் உயரும். அத்துடன் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மிகப்பெரிய பதற்றத்தை ஏற்படுத்தும். இதனால்தான் வடகொரியா விவகாரமாகட்டும் தைவான் விவகாரமாகட்டும் அனைத்திலும் சீனாவிடம் அமெரிக்கா அடிபணிந்து செல்கிறது என்று கூறப்படுகிறது. அதிபராக Xi Jinping தேர்ந்தெடுக்கப்பட்ட போது தனது உரையில் அடுத்த 30 ஆண்டுகளில் சீனாதான் வல்லரசு நாடாக இருக்கும் என பகிரங்கமாகவே அறிவித்தார்.

சீன அதிபர் Xi Jinpingஇன் இந்த உரை நிச்சயமாக அமெரிக்கர்களை கோபத்தில் ஆழ்த்தியிருக்கும். ஆனால் அதிபர் Trump இதைப்பற்றி எந்தக் கருத்தையும் கூறாமல் நீங்கள் அசாதாரணமான உயரத்தை அடைந்து இருக்கின்றீர் என மீண்டும் புகழ்ந்தார்.

சீனா விவகாரத்தில் அதிபர் Trumpஅமைதிகாக்க, இதனை தனக்கு சாதக மாகப் பயன்படுத்திக் கொண்ட Xi Jinping வல்லரசுக் கனவை நோக்கிய காய்களை நகர்த்தத் தொடங்கினார். குறிப்பாக இந்த இடத்தில்தான் தென் சீனக் கடல் பகுதி யில் சீனாவின் ஆதிக்கத்தை வலுப்படுத் தும் முயற்சியில் Xi Jinping இறங்கினார். இதில் சீனாவின் கட்டுப்பாட்டை தளர்த்தும் Trumpஇன் முயற்சி தோல்வியில் முடிய மூக்குடைபட்டு விலகியிருந்தார் Trump.

எண்ணெய் வளமிக்க தென் சீனக் கடல் பகுதியியை சொந்தம் கொண்டாடுவதில் வியட்நாம், மலேசியா, பிலிப்பைன்ஸ், தைவான் உள்ளிட்ட நாடுகளுடன் சீனா மோதலில் ஈடுபட்டு வந்தது. தென் சீனக் கடல் பகுதியில் சீனா அத்துமீறி ஆதிக்கம் செலுத்துவதாகப் பிலிப்பைன்ஸ் சர்வதேச மத்தியஸ்த தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடுத்தது. இந்த வழக்கில் சீனாவுக்கும் பாதகமான வகையில் தென் சீனக் கடலில் சர்ச்சைக்குரிய பகுதிகளில் உரிமை கொண்டாட சீனாவுக்கும் சட்டரீதியாக எந்த உரிமையும் இல்லை என்று அதிரடி தீர்ப்பு வெளியானது. இருப்பினும் அதைப்பற்றி கவலைப்படாத சீனா இயற்கை எரிவாயு, எண்ணெய் வளமிக்க தென்சீனக் கடற்பகுதியில் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் நிலைநாட்டும் முயற்சியிலேயே இறங்கியது.

இதற்காக தென் சீனக் கடல் பகுதியில் செயற்கையாகத் தீவுகளை அமைத்து விமானப்படை தளத்தை சீனா உருவாக்கியது. இந்த இடத்தில்தான் தென் சீனக் கடல் பகுதியியை சர்வதேச எல்லையாகக் கூறி அமெரிக்காவும் களத்தில் இறங்கியது. அதனால் சீனாவின் செயற்கைத் தீவுகள் அமைக்கப்பட்டு இருந்த இடத்திற்கு அருகிலேயே அதாவது செயற்கைத் தீவுகள் இருந்த பகுதியில் இருந்து சுமார் 12 கடல் மைல் தொலைவில் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் குவிக்கப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த சீனா அமெரிக்கா தனது போர்க் கப்பல்களை திரும்பப் பெறவில்லையென்றால் போர் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய சூழல் ஏற்படும் என எச்சரிக்கை விடுத்தது. அதே சமயத்தில் சர்வதேச மத்தியஸ்த தீர்ப்பாயத்தை நாடிய பிலிப்பைன்ஸ் நாட்டை தனது ஆதரவு நாடாக மாற்றும் முயற்சியில் சீனா ஈடுபட்டது.

இதற்குக் கைமேல் பயனாக அமெரிக்காவிற்கு ஆதரவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட பிலிப்பைன்ஸ் அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டை கைவிட்டு சீன ஆதரவு நிலைப்பாட்டை கையிலெடுத்தது. இதனால் தென்சீனக் கடல் விவகாரத்தில் சீனாவிடம் தோல்வியைத் தழுவி அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது.

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca




# பொதுமக்களின் பங்களிப்பே முக்கியமானது!

இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப் படாத மாவட்டங்களாக வடக்கின் மூன்று மாவட்டங்கள் அமைந்துள்ளன. கிளி நொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களே அவை. கிழக்கில் அம்பாறை மாவட்டமும் இந்தப் பட்டியலில் இருந்த போதிலும் தற்போது அங்கும் கொரோனா தொற்றுள்ளவர்கள் அடையா ளம் காணப்பட்டுள்ளனர். மலையகத்தில் நுவரெலியாவும் கொரோனா தொற்று அடையாளம் காணப்படாத மாவட்டமாகவுள்ளது.

வடக்கின் மற்றொரு மாவட்டமான வவுனியாவில் தற்போது கொரோனா அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டுள்ளது.

வெலிசறை கடற்படை முகாமில் கடமை யாற்றிய கடற்படை வீரர் ஒருவர் விடு முறையில் வவுனியா மகாகச்சகொடி பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டிற்கு வந்திருந்துள்ளார். வெலிசறை கடற்படை முகாமிலுள்ள கடற்படையினருக்கே கொரோனா தொற்று அதிகளவு பரவியுள்ள நிலையில், அந்தக் கடற்படை வீரரிடம் கடந்த 26ஆம் திகதி மேற் கொள்ளப்பட்ட இரத்தப் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த கடற்படை வீரர் கொரோனா தொற்றுப் பரிசோதனை செய்வதற்கு முன்னர் வவுனியாவில் பல இடங்களுக்கு சென்றுள்ளார். அந்த இடங்கள் பட்டியலிடப்பட்டு சுகாதார திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதிகமான வணிக நிலையங்கள் உட்பட சுமார் 14 இடங்களுக்கு மேல் அவர் சென்றுள்ளார். அந்த இடங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன. அந்த இடங்களிலிருந்தோர் அனைவரும் அவர்களின் குடும்பங்களு டன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதன் காரணமாக வவுனியாவில் பொதுமக்கள் மத்தியில் கொரோனா அச்சம் சூழ்ந்துள்ளது.

யாழ்ப்பாணம் கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட மாவட்டமாக பதிவாகியிருந்தாலும் புதிதாக எவருக்கும் தொற்றுப் பரவல் இல்லை. சந்தேகத்தின் பேரில் பலருக்குக் கொரோனா பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்ற போதிலும் புதிதாக எவரும் அடையாளம் காணப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து அடிக்கடி பாரவூர்திகளில் வவுனியாவிற் கும் கொழும்பிற்கும் சென்று வருவோருக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களில் எவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இதுவரை அடையாளம் காணப்படவில்லை.



எனவே, வட மாகாணம் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பாகவே இருந்து வருகின்றது எனலாம். இந்த நிலை தொடர வேண்டுமானால் பொதுமக்கள் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். அதுமட்டுமன்றி விழிப்புடனும் இருக்க வேண்டும். வெளியார் யாரும் தங்கள் மாவட்டங்களுக்கு வருகை தந்தால் அவர்கள் முறைப்படியான அனுமதி பெற்று வந்தனரா என்பதை அவதானிக்க வேண்டும். சந்தேகங்கள் இருந்தால் உரிய தரப்பினரிடம் உடனடியாக முறையிட வேண்டும். இது மிக முக்கியமானது.

ஏனெனில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பாரவூர்தி ஒன்றில் ஏழு பேர் அனுமதியின்றி யாழ்ப்பாணம் வந்துள்ள னர். இவர்கள் வரும் வழியில் பல சோதனை நிலையங்களையும் கடந்து எவ்வாறு வந்தனர் என்பது சந்தேகங் களை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் பின்னர் பாதுகாப்புத் தரப்பினரால் யாழ்ப்பாணத்தில் அவர்கள் தலைமறை வாக இருந்த இடங்களில் வைத்து கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்கள் கொழும்பில் கொரோனா அபாயமுள்ள பகுதியிலிருந்து வந்தோர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தோர் என்றாலும் கூட முறையான சுகாதார நடைமுறை களின் அடிப்படையிலேயே சொந்த ஊருக்கு வந்திருக்க வேண்டும். அவர்களில் எவருக்காவது கொரோனா வைரஸ் தொற்று இருந்திருந்தால் இன்று யாழ்ப்பாணத்தின் நிலை மேலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும்.

இன்று, ஒரோயொரு கடற்படை சிப்பாய் வவுனியாவிலுள்ள தனது சொந்த இடத்திற்கு வந்ததால் ஏற்பட்டுள்ள நிலைமையை அனைவரும் கவனத்தில் கொள்ள வெண்டும்.

வட பகுதியைச் சேர்ந்த பலர் இலங்கையின் பல பிரதேசங்களில் வாழ்கின்றனர். அவர்களில் பலர் தொழில் நிமித்தம் அப்பிரதேசங்களுக்கு சென்றோர். அவர்கள் இன்றைய அசாதாரண நிலையில் தங்கள் குடும்பங்களுடன் இணைந்து கொள்ள விரும்புவதை தவறென்று கூற முடியாது. ஆனால், அவர்கள் முறைப்படியான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து, அனுமதி பெற்று வரவேண்டும். இல்லாவிடில், அவர்களால் அவர்களின் குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டு, ஊர் முழுவதும் பாதிப்பிற் குள்ளாக வேண்டிய நிலை ஏற்படும்.

இன்றைய ஆபத்தானதொரு சூழ்நிலையில் ஒவ்வொரு பிரஜைக்கும் பொறுப்புணர்வு, கட்டுப்பாடு என்பன மிக அவசியமாகின் றது. இவை சரியாக நடைமுறையில் இருக்குமானால், தங்கள் தங்கள் பிரதேசங்களில் இந்த ஆபத்தான தொற்று நோயை இல்லாமல் விரட்டியடிக்கலாம்.

இதேவேளை, யாழ்ப்பாணம் உட்பட வடக்கின் பல பகுதிகளில் புதிதாக தனிமைப்படுத்தும் மையங்கள் அமைக்கப் படவிருப்பதாகவும், பாடசாலைகள் சிலவும் இதற்காகப் படையினரால் கோரப்பட்டிருப்ப தாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கு அந்தந்த ஊர்வாசிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இவ்வாறான முகாம் கள் அமைக்கப்படுவதை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும். மருத்துவர்கள், சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனை மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே தனிமைப்படுத்தும் மையங்கள் அமைக்கப்படுதல் வேண்டும். அச்சம் காரணமாக இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொதுமக்களுக்கு மருத்துவத் துறையினர் சரியான விளக்கங்களை வழங்கி அவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

ஒரு பக்கம் அரசாங்கம் தனது திணைக் களங்கள் மூலமாகவும், அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள செயலணிகள் மூலமாகவும் பல திட்டங்களையும் நடைமுறைகளையும் மேற்கொண்டாலும் கூட, அந்தந்த மாவட்டங்களில்- ஊர்களில் வாழும் மக்கள் பொறுப்புடனும் வழிப்புணர் வுடனும் இருப்பது கட்டாயமானது. இதன் மூலமாகவே தங்கள் ஊரை -பிரதேசத்தை- மாவட்டத்தை இந்தக் கொடிய வைரஸ் பரவலில் இருந்து காப்பாற்ற முடியும்.

## WhatsApp குழுவில் எப்படி நடந்து கொள்வது?

- குழுவின் நோக்கம் மற்றும் காரணத்தைத் தெரிந்துகொண்டு செயல்படுங்கள்.
- குழுவில் பதிவிடும் செய்திகள் உண்மையானதா என உறுதி செய்தபின் அனுப்புங்கள்.
- உங்களிடம் இருந்துவரும் செய்தி உண்மை எனில் மற்றவர்களால் மதிக்கப்படுவீர்.
- தனிநபருடன் கலந்துரையாட விரும்பினால், குழுவுடனில்லாமல் அவருடன் தனியாக விவாதிக்கவும்.
- பயனுள்ள தகவல்களை மட்டும் பதிவிடுங்கள். உங்களை தரம் உயர்த்திக் காட்டும்.
- நாம் ஒன்றுக்கும் மேற்பட்ட குழுக்களில் இருப்பதால் அதிகமாக மறுபதிவு செய்ய நேரிடுகிறது.
- ஒருமுறை பார்த்த வீடியோ மற்றும் படத்தை உடனே அழித்துவிடவும். பார்த்த விடயம் மறுமுறை வந்தால் அதை உடனே நீக்கவும்.
- ஒரு வீடியோ மற்றும் படத்தைப் பார்த்தவுடனே அதை அடுத்தவருக்குப் பகிரலாமா வேண்டாமா, ஏற்கனவே பகிரப்பட்டதா என்று முடிவு செய்யுங்கள். பின்னர் பகிருங்கள்.
- தவறான மருத்துவ குறிப்புகளை குழுவிற்கு அனுப்ப வேண்டாம். வதந்திகளுக்குத் துணைபோகாதீர்.
- கொலை செய்வது, கையை வெட்டுவது போன்ற கொடூரமான, ஆபாசமான, கோரமான படங்கள்/ வீடியோவை அனுப்ப/பகிர வேண்டாம்.
- காலை, மாலை, இரவு வணக்கங்களை குழுவில் பதிவு செய்வதைத் தவிருங்கள்.
- எம்மாலும் எமது பதிவாலும் குழுவின் நிர்வாகம் பாதிக்கப்படாதவாறும், மற்றவர் வெறுக்கத்தகாதவாறும் பதிவிட வேண்டும்.
- குழுவில் சில தேவைகளைப் பதிவிடும்பொழுது நாள் மற்றும் தங்கள் பெயருடன் பதிவிடுங்கள். மற்றவருக்குப் பெயர் தெரிய வாய்ப்பாகும்.
- பல மருத்துவ அல்லது கல்வித் தேவை குறித்த செய்திகள், வருடக் கணக்காகப் பரிமாறப்படுகின்றன.
- எப்பொழுதும் குழுவில் அமைதியாக இருக்காதீர்.
- வீடியோ அல்லது படங்கள் பதிவிடும் போது அதில் என்ன உள்ளது, எதைப் பற்றியது என்பதைக் குறிப்பிட எக்காரணம் கொண்டும் மறவாதீர். நம்மில் பலர் இதைச் செய்வதே இல்லை.

World Class Realty Point Brokerage
Affordable Homes ♦ Pre-Construction Condos
Investment Properties
Search Here - Find Here
HousePrice.ca
www.HOUSEPRICE.ca
Right Realtor Right Price
Sam Surendran
Sales Representative
Dir: 647.350.0220
World Class Realty Point Brokerage
55 Lebovic Ave, #C115, Toronto, ON M1L 0H2. Tel: 416.444.7653

# சர்வதேச...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

தென்சீனக் கடல் பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டுள்ள சீனா தனது வல்லரசுக் கனவுக்கான அடுத்த அஸ்திரமாக பட்டுப்பாதைத் திட்டத்தை (Silk Road) கையில் எடுத்தது. இதற்காக இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட நாடுகளைத் தனது கட்டுப்பாட்டிற்குள் அல்லது தனது ஆதரவு நிலைப்பாட்டுக்கு கொண்டுவரும் முயற்சியில் இறங்கியது. சீனாவின் இந்த முயற்சிக்கு பாகிஸ்தான் இலங்கை போன்ற நாடுகள் எதிர்ப்புத் தெரிவிக்காது என்று நம்பியதால் இந்தியாவை தனது கட்டுக்குள் கொண்டுவரவும் திட்டமிட்டது. அருணாசலப் பிரதேசம், டோக்லாம் (இந்தியா, பூடான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையே முச்சந்தியில் இருக்கும் பகுதி) விவகாரம் உள்ளிட்டவற்றில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது. அருணாச்சல பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரத் துடிக்கும் சீனா டோக்லாம் பகுதியில் கடந்த 2018ஆம் ஆண்டு தனது ராணுவத்தை ஊடுருவச் செய்தது. இதனால் சுதாகரித்துக்கொண்ட இந்திய ராணுவம் டோக்லாம் பகுதிக்குச் சென்று சீனாவின் ஆக்கிரமிப்பு முயற்சியை தடுத்து நிறுத்தியது. அப்போதைய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் களத்திற்கே சென்று இந்திய ராணுவத்திற்கு ஆலோசனைகளை வழங்கினார். இந்தியா சுதாரித்துக் கொண்டதை அறிந்த சீனா பின் வாங்குவதுபோல் ஒரு நடிப்பை வெளிப்படுத்தியது. இருப்பினும் தெற்காசிய பிராந்தியத்தில் தனக்கு போட்டியாக இருக்கும் இந்தியாவை கட்டுக்குள் கொண்டுவரவும் அதன் ராணுவ நடவடிக்கைகளை வேவு பார்க்கும் ஒரு புதிய முயற்சியை கையிலெடுத்தது அதற்கு சீனா வைத்துள்ள பெயர் அம்பாந்தோட்ட துறைமுகம்.

இலங்கையில் உள்ள அம்பாந்தோட்ட துறைமுகத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதன் மூலமாக இலங்கையை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதுடன் இந்தியாவையும் கட்டுப்படுத்த முடியும் என்று சீனா நம்புகிறது. இந்தியாவுடன் போர் என்ற நிலை வந்தால் இலங்கையிலிருந்து தமிழகத்தைத்தான் முதலில் சீனா தாக்கக்கூடும். இதற்காக அம்பாந்தோட்ட துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு குத்தகை எடுத்திருக்கிறது. இதனால் இந்திய கடல் பகுதியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை சீனா ஏற்படுத்த வாய்ப்பு உருவாகியுள்ளது. இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை யார் தனது கட்டுப் பாட்டில் வைத்திருக்கிறார்களோ அவர்களே அடுத்த வல்லரசு என்ற வாதம் பெரும்பாலும் முதன்மையாக முன்வைக்கப்படுகிறது.

தற்போது சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள அம்பாந்தோட்ட துறைமுகம் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை நோக்கி இருப்பதால் சீனாவால் இந்தியாவிற்கு ஆபத்து இருப்பதாகவும் இந்திய பெருங் கடல் பிராந்தியத்தை தனது கட்டுப் பாட்டுக்குள் சீனா கொண்டு வருமென அமெரிக்கா ஐரோப்பிய நாடுகள் எச்சரிக்கை விடுக்கின்றன. இந்த எச்சரிக்கை சமிக்சை அடங்குவதற்குள்ளாகவே இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் 2 நீர்மூழ்கி கப்பல்களை நிறுத்தியது சீனா. இந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் இந்தியாவிற்கு சீனா போர் எச்சரிக்கை விடுத்ததாக கடந்த 2018ஆம் ஆண்டு கூறப்பட்டது.



இந்தியாவின் வடக்கு எல்லையான டோக்லாம் வடகிழக்கு எல்லையான அருணசலப் பிரதேசத்தில் இந்தியாவை வம்புக்கு இழுப்பது போலவே தெற்கு எல்லையான இந்திய பெருங்கடல் பிராந்தியத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து தெற்காசியாவில் தன்னை விடப் பலம் பொருந்திய ஒரு நாடு இருக்கவே கூடாது என்று இந்தியாவை மறைமுகமாக மிரட்டி வருகிறது.

பாகிஸ்தான் மற்றும் சீனாவுக்கு இடையே புதிய பட்டுப்பாதை திட்டத்தை இணைப்பதன் மூலம் இந்தியாவிற்கு சீனா தற்போது ஆத்திரத்தை உண்டாக்கியுள்ளது. சீனாவில் ஏற்பட்ட புரட்சிக்குப் பிறகு அந்த நாடு அடைந்த அபரிமிதமான வளர்ச்சியை யாராலும் மறுக்க முடியாது. இதற்காக அந்த நாடும் நாட்டு மக்களும் செய்த தியாகம் மிகப்பெரியது. இதனால் இன்றைய சூழலில் உலகின் எல்லா மூலைகளிலும் சீனாவின் தொழில் நுட்பங்கள்தான் பெருமளவு பயன்பாட்டில் இருக்கின்றன. இதனைவிட கூடுதல் உச்சத்தை அடைய வேண்டும் என்பதற்காக சீனா பல்வேறு வியூகங்களை வகுத்து இருக்கிறது.

அதில் முக்கியமானதாக இருப்பது சீனா பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம். சீனா பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தின் மூலம் ஐரோப்பா ஆசியா என இரண்டு கண்டங்களின் ஒட்டுமொத்த நுகர்வோர் சந்தையையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் திட்டத்தை கையில் எடுத்திருக்கிறது. இந்த பாகிஸ்தான், சீனா பொருளாதார வழித்தடத்துக்கு இந்தியாதான் முட்டுக்கட்டையாக இருக்கிறது. இருப்பினும் இந்தியாவை சமாதானப்படுத்தி இந்தத் திட்டத்தின் உறுப்பு நாடாக இந்தியாவை மாற்ற வேண்டும் என்ற முயற்சியில் சீனா இறங்கியிருக்கிறது. இந்தியாவை விட சிறந்த பொருளாதாரக் கட்டமைப்பு கொண்ட நாடாக சீனா தன்னை உருவாக்கிக் கொள்வதற்காக One Belt, One Road எனப்படும் ‘ஒரு சூழல் ஒரு பாதை’ என்ற திட்டத்தை செயல்படுத்தத் துடிக்கிறது. அத்துடன் பழைய ஐரோப்பிய நாடுகளையும் ஆசிய நாடுகளையும் ஒன்றிணைக்கும் வகையில் பட்டுப்பாதைத் திட்டம் ஒன்று ஏற்கனவே இருந்ததை தற்போது தூசி தட்டிக் கையில் எடுத்திருக்கிறது சீனா. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதி வழியாக இந்தப் புதிய பட்டுப்பாதை செல்வதால் அதில் சேருவது குறித்து எதிர்மறைக் கருத்தில் இருக்கிறது இந்தியா. இப்படி டோக்லாம் எல்லை, அருணாச்சலப் பிரதேச எல்லை, அம்பாந்தோட்ட துறைமுகம், பாகிஸ்தானில் புதிய பட்டுப்பாதை அமைப்பு என இந்தியாவைச் சுற்றி ஒரு சிலந்தி வலையை இந்தியாவுக்கு எதிராக சீனா பின்னி வருவதை நம்மால் கவனிக்க முடிகிறது.

இலங்கை அம்பாந்தோட்ட துறைமுகத்தின் மூலமாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் அதன்மூலம் இந்தியாவின் வளர்ச்சியை தடுத்து நிறுத்த சீனா வியூகத்தை உருவாக்கியுள்ளது. இதற்காக சீனா தனது மற்றொரு ஆயுதத்தையும் கையில் எடுத்துள்ளது. அதுதான் இந்தியா பாகிஸ்தான் இடையிலான பகை உணர்வு. இந்தியா பாகிஸ்தான் இடையே வரலாற்று ரீதியாக இருக்கும் பகை உணர்வைத் தூண்டி விட்டு அதன்மூலம் இந்தியாவை நெருக்கடியில் ஆழ்த்த சீனா திட்டங்களை வகுத்துச் செயல்படுகிறது. இந்த சூழலில் தான் பாகிஸ்தானை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப் பாகிஸ்தானுக்கு உதவுவது போன்ற காரியங்களை கையிலெடுத்தது. அப்பொழுதுதான் அமெரிக்க அதிபர் Trump ருவிற்றரில் செய்த ஒரு பதிவு அதற்கு சாதகமாக அமைந்தது. அதாவது தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையை அமெரிக்கா கையில் எடுத்தபொழுது பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஊக்குவிப்பதாக உலக நாடுகள் முறையிட்டன. பாகிஸ்தானில் தீவிரவாதம் ஊகுவிக்கப்பட வில்லை என்றும் அதற்காக தீவிரவாத குழுக்களுக்கு எந்த நிதியும் அளிக்க வில்லை என வெளிப்படையாகவே அறிவித்த நவாப் செரிப் அமெரிக்காவின் தீவிரவாத ஒழிப்புக்குப் பாகிஸ்தான் எப்போதும் துணை நிற்கும் என்று கூறினார். இருப்பினும் அந்த வார்த்தைகளை நம்பாது அமெரிக்கத் தலைவர்களை பாகிஸ்தான் அரசு முட்டாள்களாக நினைத்துக் கொண்டிருப்பதாகக் கொந்தளித்தார்.

அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் ஆப்கானிஸ்தானின் பயங்கரவாதிகளை ஒழிக்க அமெரிக்கா தீவிரம் காட்டிவரும் நிலையில் அங்கிருந்து தப்பிய பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் தஞ்சம் அடைவதாகவும் அவர்களுக்கு அமெரிக்காவின் நிதி உதவி களைக் கொண்டே பாகிஸ்தான் உதவி செய்து வருவதாகவும் குற்றம் சாட்டினார் Trump. தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையில் பாகிஸ்தான் தங்களை ஏமாற்றுவதாகப் பகிரங்கமாக அறிவித்த அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவியை நிறுத்துவதாகவும் தீவிரவாதத்திற்கு எதிராகப் பாகிஸ்தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பொறுத்தே அடுத்த கட்டமாக நிதி உதவியைத் தொடரலாமா அல்லது நிறுத்தலாமா என்பதை முடிவு செய்ய முடியும் என்றும் அறிவித்தது. வெறும் பேச்சுக்காக பாகிஸ்தானை பணிய

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)



# கொரோனாவுக்கு எதிராக பிரிட்டனில் இந்திய வம்சாவளி ரிஷி சுனக்!

உலக நாடுகள் முழுவதும் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவி வருகிறது. பிரிட்டனில் தற்போது கொரோனா தொற்றால் 150,000க்கு மேற்பட்டோர் பாதிக் கப்பட்டுள்ளனர். இந்தத் தொற்று பிரிட்டன் இளவரசர் Charles, பிரதமர் Boris Johnsonயும்கூட விட்டுவைக்கவில்லை. கொரோனாவால் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தபோது பிரதமர் Boris Johnson, தனது முக்கிய அரசாங்கப் பொறுப்புகளை நிதி அமைச்சரான, ரிஷி சுனக் (Rishi Sunak)கிடம் ஒப்படைத்திருந்தார். இவர்தான் தற்போது அந்த நாட்டில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

**யார் இந்த ரிஷி சுனக்?**

இங்கிலாந்திலுள்ள Southampton நகரில் இந்திய வம்சாவளித் தாய் தந்தையருக்குப் பிறந்த இவர் Stanford University இல் MBA பட்டமும் Lincoln College,Oxford இல் BA பட்டமும் பெற்றார். Stanford Universityஇல் படித்தபோது, இந்தியாவிலுள்ள இன்போசிஸ் (Infosys) நிறுவனத்தின் தலைவர் நாராயணமூர்த்தியின் மகள் அக்ஷதாவை (Akshata) சந்தித்து 2009இல் திருமணம் செய்துகொண்டார். தொழிலதிபராக அறியப் படும் ரிஷி சுனக் இங்கிலாந்தில் வாழும் இரண்டாம் தலைமுறை இந்தியர். காட்மாரான் வென்ச்சர்ஸ் (Catamaran Ventures) நிறுவனத்தின் இயக்குநராக இருந்த படி, தன் மனவியுடன் இணைந்து ஓர் ஆடைகள் வடிவமைப்பு நிறுவனத்தை நடத்திவந்தார். இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் Theresa Mayஇன் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியில் இணைந்து தீவிரமாகக் கட்சிப் பணியாற்றி வந்தார்.

26 ஆண்டுகளாக கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த வில்லியம் ஹாக் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துவந்தார். அவர், 2014ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் பதவி விலகியதுடன், ஒட்டுமொத்த அரசிய லில் இருந்தும் ஓய்வுபெற்றார். அந்த இடத்துக்கான தேர்தல் 2015ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. அதில், ஏற்கெனவே கன்சர்வேட்டிவ் கட்சி செல்வாக்காக உள்ள நிலையில், அக்கட்சி சார்பாக ரிஷி சுனக் போட்டியிட்டு, மொத்தம் 27,744 வாக்குகளைப் பெற்று அபார வெற்றிபெற்றார்.

கடந்தமுறை போரிஸ் ஜோன்சன் பிரதமராக




வந்தபோதும் நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தில், நிதித்துறை அமைச்சர் பொறுப்பிற்கு நிகரான Chief Secretary to the Treasury பொறுப்பு வழங்கப்பட்டது. செயலாளர் பதவி என்றாலும் அமைச்சரவைக் கூட்டங்களிலும் பங்கேற்கும் அதிகாரம் அவருக்கு இருந்தது. இதன்பின் டிசெம்பரில் நடந்துமுடிந்த தேர்தலில் 26,086 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். இதனால் இந்த முறை அவருக்கு இணை அமைச்சர் பதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இங்கிலாந்தில் உள்துறைச் செயலாளராக (Chief Secretary to the Treasury) இருந்த பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த சாஜித் ஜாவித்துக்கு நிதித்துறையின் தலைமைப் (Chancellor of the Exchequer) பொறுப்பை கொடுத்தார் போரிஸ் ஜோன்சன். ஆனால், கருவூலத்தில் (Treasury) ஜாவித்துக்கு உதவியாளராக இருந்த அத்தனை பேரையும் பதவிநீக்கப் போரிஸ் ஜோன்சன் உத்தரவிட்டார். இதற்கு ஜாவித் எதிர்ப்பு தெரிவிக்கவே, விவகாரம் பெரிதானது.

இறுதியாக பெயரளவில் மட்டும் தன்னால் தலைமைப் பொறுப்பில் இருக்க முடியாது என்று தனது பதவியை ஜாவித் ராஜினாமா செய்தார். இந்நிகழ்வு பிரிட்டன் அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. தேர்தலில் மிகப்பெரிய வெற்றிபெற்ற குறுகிய காலத்தில், போரிஸின் இந்த நடவடிக்கை சர்ச்சைகளை ஏற்படுத்தியது. ஆனாலும் பதற்றம் அடையாத போரிஸ் தனது பணியினை தொடர்ந்தார்.

ஆனால், எதிர்பாராத திருப்பமாக நிதித் துறை அமைச்சர் ஜாவித் ராஜினாமா செய்ய, தற்போது நிதித்துறை அமைச்சர் அதிகாரம் ரிஷியைத் தேடி வந்துள்ளது. போரிஸ் ஜோன்சனின் Brexitஇனை பெருமளவு ஆதரித்தவர் ரிஷி சுனக். கன்சர்வேட்டிவ் கட்சிக்கு மட்டுமில்லை, போரிஸ் ஜோன்சனின் நம்பிக்கைக்குரிய மனிதராக வலம் வருவதால்தான் தொடர்ந்து அவரது அரசில் ரிஷிக்கு முக்கியப் பொறுப்புகள் கொடுக்கப்பட்டன.

ஏற்கெனவே ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேறுவதை ஆதரித்ததன் மூலம் பிரதமரின் நம்பிக்கையைப் பெற்றி ருந்தார் சுனக். இதனால் பிரிட்டனின் முக்கிய அரசியல் அதிகாரிகள் வாழும் Downing Streetஇல் பிரதமரின் வீட்டு எண் 10-க்கு அடுத்த 11இல் வாழ ஆரம்பித்தார் சுனக். இது மறைமுகமாக நிதித் தலைவர் அரசாங்கப் பொறுப்புகளில் பிரதமருக்கு வலதுகரமாக செயல்படுவார் என்பதை குறிப்பதே. சுனக் பதவியேற்ற அடுத்த மாதத்திலேயே பிரிட்டனின் வரவுசெலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்து எல்லோரையும் ஆச்சரியப்படுத்தினார்.

தற்போது நாட்டின் நிதித் தலைவராகப் பொறுப்பேற்ற 6 வாரங்களே முடிவடைந்த நிலையில் பிரிட்டனில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் முக்கிய பணி யில் ஈடுபட்டு வருகிறார் சுனக். இந்தத் தொற்று பற்றி பிரதமர் பேச ஆரம்பித்த எல்லா கூட்டத்திலும் சுனக் அவருடனே காணப்பட்டார். பிரதமர் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்த காலத்தில் வீட்டில் இருந்தபடியே வேலை செய்தார். அப்போது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புகள் ரிஷி சுனக்கிடம் வந்தன.

கொரோனாவால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை வகுத்து வருகிறார் ரிஷி சுனக். சொந்தத் தொழில் செய்வோ ரான கட்டிடத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், அழகுக் கலை நிபுணர் போன்றோரைச் சந்தித்துப் பேசினார். இதன்பிறகு சொந்தத் தொழிலில் ஈடுபடு வோருக்கு ஊரடங்கால் ஏற்பட்ட இழப் பீட்டைச் சமாளிக்கும் வகையில் அவர் களின் வருமானத்தில் 80 சத வீதத்தை வழங்கமுடிவு செய்தார். பிரிட்டன் அரசாங்கம் மக்களின் வருமானத்தை வழங்குவது இதுவே முதல் முறையாகும்.

மேலும், கொரோனா வைரஸால் பாதிக்கப்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)



**Math tutorial 408**

**Answers to tutorial 407**

1)The sequence of heights that the ball travels is 16 ,8 ,8 ,4 ,4 2 ,2 ,1

Therefore the total distance that the ball travelled =45 metres

2)Let $a_n$ represent the nth number in the sequence

Since $a_7 = a_6 + a_5$ ,ten $a_5 = a_7 - a_6$ =47-29 =18

Similarly $a_4 = a_6 - a_5$ =29-18 =11

$a_3 = a_5 - a_4$ = 18 -11 =7 , therefore the 3rd number in the sequence is 7

3)Since there are 5 possibility for each question , there are possible $5^7$ =78125 possible answer sheets . Since there are 30,000 students ,every answer sheet could be different.

**Tutorial 408**

**Questions**

1)The digits used to number all the pages of a book were counted. If the number of digits used was 216 , find the number of pages in the book?(for gr 6-7)

2)The odd number between 301 and 370 has 3 different digits . If the sum of the digits five times the hundreds digit , find the number?

(for gr 7-8)

3)You are given a collection of 20 multiple choice questions .four each with possible answers A,B,C,DORE .How many different sets of ten questions can be formed if the set has exactly two questions with each possible answer?

(for gr 12)

4)Differenciate

a)$y = 1/(x^3 - 4x)$ b)$y = (x^3 + 6x)^{1/3}$

c)$y = (x^4 - 2x^3)^2$

By Mr S.F.Xavier(Teacher)

6473409490/4167322228

## நாமும் நமது இல்லமும் 557


# கனேடிய வர்த்தக நிலையங்களில் நிலைமை



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

பொதுவாக நிலையான அரசு உள்ள நாடுகளின் வர்த்தகங்கள் சிறப்பாக இருக்கும். கனடா போன்ற நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை, ஒழுங்கமைப்பான சட்டதிட்டங்கள், புதிய வரவாளர்களின் வருகை (2020 விதிவிலக்காக இருக்கக்கூடும். ஏற்கனவே கியூபெக் மாகாண அரசு புதிய வரவாளர்களை இவ்வருடம் குறைக்க வேண்டுமென கலந்தாலோசிக்கிறது.) போன்றவை வர்த்தகத்தையும் அதிகரிக்கும் என்பது இயல்பே.

ரொறொன்ரோ, மொன்றியல், வன்கூவர் போன்ற முக்கிய நகரங்களில் ஏற்கனவே சிறந்த இடங்களை வாடகைக்கு பெறுவதில் நெருக்கடி காணப்படுகிறது. வட அமெரிக்காவில் தொழிலகம் அமைப்பதற்கான இடங்களின் (Industrial Units) நிலைமை மிகவும் இறுக்கமாகவே காணப்படுகிறது. CBRE Commercial Realtor, Feb. 26, 2020இன் அறிக்கையின்படி வட அமெரிக்காவிலுள்ள 10 நகரங்களில் குறைந்தளவு vacancy rate உள்ள 5 நகரங்கள் (Toronto, Vancouver, Victoria, Ottawa, Quebec City) கனடாவிலே உள்ளன. அத்துடன் அலுவலகம் (Office units) அமைப்பதற்கான நிலைமையும் இவ்வாறு காணப்படுகின்றது. இன்றைய நிலைமையில் ரொறொன்ரோ, மொன்றியல்,




வன்கூவர் போன்ற நகரங்களை விட மக்கள் குறைவாக வாழும் இடங்களையே புதிய வியாபார நிலையங்களாக தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகமாகும்.

கடந்த 11 வருடங்களாக வாடகை அதிகரித்தே வந்துள்ளது. ஆனால் 2020 முதற் காலப்பகுதியில் ஏற்பட்ட COVID19 இன் பாதிப்பு இந்த நிலைமையை எவ்வாறு மாற்றும் என்பதே கனடிய மக்களிடம் தோன்றும் கேள்வி. இதன் பதிப்பு 1920இன் இறுதியிலும் 1930இன் ஆரம்பத்திலும் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவைவிட (Economic Depression ) மிகவும் மோசமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே பல வியாபார நிலையங்கள் தமது தொழிலை நிரந்தரமாக மூடுவதாக தீர்மானித்துள்ளது தெரியவருகிறது. இந்நிலைமையின் பாதிப்பு எதிர்காலத்திலேயே தெரியவரும்.

ஏற்கனவே மத்திய அரசு COVID19இன் பாதிபிற்குப் பின்பான பொருளாதாரத்தை எவ்வாறு மீட்டெடுக்கலாம் என்பதற்கு திட்டங்கள் போட தொடங்கியுள்ளது நல்ல ஆரம்பம். 2008/2009இல் ஏற்பட்ட பொருளாதார இறுக்கத்தை இலகுவாக முறியடித்த கனடிய அரசும் மத்திய வங்கியும் புதியமுறையில் இந்தப் பொருளாதார பின்னடைவில் இருந்து மீளுவதற்கான பல நடைமுறைகளை கையாளுவர் என்று எதிர்பார்க்கலாம். ஏற்கனவே கட்டிட நிர்மாணம், மறுகட்டமைப்பு மற்றும் மொன்றியல்- ரொறொன்ரோவிற்கான ரயில் பாதை அமைப்பு போன்ற பல புதிய திட்டங்கள் வெளியிடப் பட்டுள்ளன. COVID19இன் பாதிப்பு எவ்வளவு காலம் தொடரும் என்பதே இன்றைய கேள்வி

### கனடிய வங்கியின் குறைந்த வட்டி வீதம் நிலைக்குமா?

COVID19இன் பாதிப்பால் தொடர்ச்சியாக மூன்று தடவை வட்டி வீதம் குறைக்கப் பட்டு, இன்றைய கனேடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 0.25%ஆகக் காணப்படுகிறது.

ஏப்ரல் 15, 2020இல் கூடிய வங்கியின் ஆளுமைக்குழு வட்டி வீதத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அத்துடன் இப்பொழுதுள்ள வட்டி வீதத்திற்கு மேலும் கீழேகொண்டு செல்லும் உடனடி நோக்கமும் இல்லை என வங்கியின் ஆளுநர் Stephen Poloz தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மூன்று மாதங்களும் பொருளாதாரத்தில் மேலும் இறக்கம் ஏற்படும் என்றே எதிர்பார்க்கலாம். மத்திய அரசும் மத்திய வங்கியும் பலவித பொருளாதார ஊக்குவிப்புக்களை செய்து வருகின்றன. இதன் தாக்கம் எவ்வாறு இருக்குமென எதிர்காலம் தான் பதில் சொல்லும். எனினும் உடனடியாக எதுவித முன்னேற்றத்தையும் காணமுடியாது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனைத் தவிர்ப்பதற்காக பல முன்னேற்பாடுகள் நடைபெறுகின்றன.

### COVID19 இனால் பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்பு

உலக பொருளாதாரத்திற்கு ஒரு பேரிடி நிதிப்பற்றாக்குறை அதிகரிப்பு. இதனால் அரசாங்கங்கள் நிதியை மிக அதிக அளவில் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளன. COVID19 தொடங்கியதாகக் கூறப்படும் சீனாவின் பொருளாதாரம் மிகப்பெரிய அளவில் பாதிக்குமா என்பது கேள்விக்குறி. ஆனால் அநேகமாக எல்லா நாடுகளிலும் இதன் பாதிப்பு நிச்சயமாக இருக்கப்போகிறது. மூன்று அடுக்கு அரசுகளும் ஏதோ



வழிகளில் மக்களின் வாழ்க்கையை சீர்படுத்துவதற்கேற்ற நிகழ்ச்சித் திட்டங்களை முன் னெடுத்து வருகின்றன. இதன் தொடர்ச்சியாக கனடிய அரசின் 2020 /2021ஆம் ஆண்டிற்கான நிதிப்பற்றாக் குறை (Deficit) $200 பில்லியனைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2009/2010ஆம் ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறை $56பில்லியனாக இருந்தது. அப்போது இது பெரிய தொகையென பொருளாதார நிபுணர்கள் கூறியிருந்தனர். அப்பொழுது எதிர்க்கட்சிகளும் ஆளும் கட்சி மீது குற்றம்சாட்டி இருந்தன. ஆனால் இன்றைய நிலைமையில் எதிர்க் கட்சிகளும் ஆளும் கட்சியுடன் சேர்ந்து மக்களின் இடரை நீக்க முற்படுகின்றனர். கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ ஒவ்வொருநாளும் காலை 11:15 மணிக்கு கனேடிய மக்களுக்குத் தமது செயற்பாடுகளையும் ஊக்குவிப்புக்களையும் அறிவித்து வருகின்றார். இதனைத் தொடர்ந்து மதியம் 1:00 மணிக்கு ஒன்ராறியோ மாகாண முதல்வர் Doug Ford தமது செயற்பாடுகளை தெரியப்படுத்துகிறார்.




### மகள்

பெண்ணாய்ப் பிறந்த போது வருந்தியவர்களை
நன்றாய் வளர்ந்து தேற்றினாய்!
போட்டிகளிளெல்லாம் முதலிடம் பிடித்து மகிழ்வித்தாய்
நல்ல மருமகள் என்று பேரெடுத்தாய்
நல்ல தாயுமானாய்
உன் குழந்தைக்கு மட்டுமல்ல
உற்சாகப்படுத்தும் போது எனக்குமே!



மாரீஸ்வரி, மதுரை

# Brand New House For Sale - In Scarborough




- 4 Bedrooms
- 1 Half + 3 Full washrooms
- Double Door Double Garage
- Double Door walkout Basement
- Lot size (50' X 170')
- Revine Lot
- Large Deck • Fireplace
- Size - 3,300 sq.ft.





Raja Mahendran**
416.315.9397

## HomeLife / GTA Realty Inc. Brokerage*

**416.321.6969**

HOMELIFE HIGHER STANDARDS

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated ** Broker

# Proud to be serving you through these two Funeral Homes!

**GTA EAST**

OGDEN
FUNERAL HOMES
4164 Sheppard Ave E,
Scarborough, ON M1S 1T3.
www.ogdenfuneralhome.com

**GTA WEST**

LOTUS
Funeral and Cremation Centre Inc.
121 City View Dr,
Etobicoke, ON M9W 5A8.
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401, between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410, 427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage



## Patricia Peter BBM
*Licenced Funeral Preplanning Director*
*Licenced Insurance & Investment Advisor*

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com

*"Serving With Dignity, Compassion and Excellence"*




# கொரோனா...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

பட்ட நிறுவனங்களுக்கு CLBILS (Corona Virus Business Interruption Loan Scheme) என்ற பெயரில் அவசரகாலக் கடன் உதவித் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி யுள்ளார். இதன்மூலம் வருடத்துக்கு 45 மில்லியன் பவுண்ட் முதல் 500 மில்லியன் பவுண்ட் வரை வருமானம் ஈட்டும்



நிறுவனங்கள் கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மீள 25 மில்லியன் பவுண்டைக் கடனாகப் பெற முடியும். பெரிய நிறுவனங்களுக்காக இதுவரை 1.9 பில்லியன் பவுண்டுகள் வழங்கப்பட்டுள்ளது. இதோடு கொரோனா வைரஸ் பாதிப்பைத் தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்திக் கொண்ட வங்கி உரி மையாளர்களிடமும் பேச உள்ளார் சுனக்.

ரிஷி சுனக் பதவியேற்று சிறிது காலம் ஆன நிலையில் தேசத்தையே கொரோனா வுக்கு எதிரான போரில் வழிநடத்திச் செல்கிறார். இவரது முக்கியமான பணி, நிதி திட்டமிடுதல்தான் என்றாலும் பிரதமர் இல்லாத சமயத்தில் அவருடைய பணியை யும் திறம்படச் செய்து வந்திருக்கிறார்.

இவர் நாட்டு மக்களிடையே கொரோனா வுக்கு எதிரான எழுச்சி மிகு உரையையும் ஆற்றி வருகிறார். கடந்த சில நாள் களுக்கு முன் பிரித்தானிய சந்தை ஆய்வு நிறுவன மொன்று நடத்திய ஆய்வு முடிவில் சுனக்கிற்கு ஆதரவாக 60 சத வீதம் மக்கள் வாக்களித்துள்ளனர். இவருக்கு எதிராக 11 சதவீதம் மக்கள் மட்டுமே வாக்களித்தனர். அதேசமயத்தில் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு ஆதரவாக 55 சதவீதமும், எதிராக 35 சத




வீதமானோரும் வாக்களித்தனர். சுனக் பிரித்தானிய மக்களிடையே நம்பிக்கை நட்சத்திரமாக உருவெடுத்துள்ளார் என்பதற்கு இதுவே சாட்சி. கன்சர்வேடிவ் கட்சி வட்டாரத்திலேயே சுனக் பிரித்தானி யாவின் முதல் சிறுபான்மையின பிரதம ராக உருவெடுப்பார் என்ற வகையில் பேசி வருகின்றனர். அவ்வளவு திறம்பட, கொரோனாவுக்கு எதிரான போரில் பிரித் தானியாவின் 66 மில்லியன் மக்களையும் வழிநடத்தி வருகிறார் ரிஷி சுனக்.

கொரோனா காரணமாகப் பிரித்தானிய பவுண்ட் மதிப்பின் வீழ்ச்சி, நிறுவனங்கள் மூடப்படுதல், முன்னணி மருத்துவமனை கள் நிரம்பி வழிதல் எனப் பல சவால்களையும் தாண்டி பிரித்தானியாவின் பொருளாதாரத்தை சீர்செய்யும் முயற்சி யில் ஈடுபட்டு வருகிறார் ரிஷி சுனக். இவரின் எழுச்சியைக் கண்டு இந்தியாவை பிரிட்டன் ஆண்டதுபோல தற்போது பிரிட்டனையே இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் வழிநடத்தி வருகிறார்" என்று சமூக வலைத்தளங்கள் புகழாரம் சூட்டி வருகின்றன.

# நாம் யாருக்காக வாழ்கின்றோம்?



அம்மா!
நீங்கள் சங்கமித்த நேரத்தில்
உருத் தெரியாத பிண்டமாய்
தொடங்கிய நொடியில் இருந்து
உன் அடி வயிறு நிரம்பத் தயாராகிறது
நீ விளைவுகளைப் பற்றி யோசிக்காமல்
உணர்வுகளை உள்ளடக்கி
என்னை உச்சி மோர்ந்துப் பார்க்க
உன் உயிரினைத் திரட்டி
நான் வரும் நாட்களுக்காக
காத்துக்கொண்டு இருக்கின்றாய்
காலம் கனிந்து நான் பிறந்தபோது
நீ கொடுத்த தாய்ப்பாலில்
நம்பிக்கை என்ற சுவையை
மட்டுமே நானறிந்தேன்
ஆனால் இங்கு யாரோ செய்த தவறுகளுக்கு
எங்களை ஏன் தண்டிக்கின்றனர்
எங்களுக்கு விளை நிலமும் வேண்டாம்
விளையாட்டும் வேண்டாம்
யாருமற்ற சூழலில் நான் யாரை எப்படிக் கூப்பிடுவது
அம்மா என்றா அப்பா என்றா அத்தை என்றா மாமா என்றா
தயவு செய்து இனிமேலாவது எங்களை விட்டு விடுங்கள்
எப்படி ஒரு துளி உயிரில் உருவம் வருகிறதோ அதுபோல
எங்கள் சுவாசம் அடங்கும் முன் என் ஒரு துளி ரத்தத்தில்
யாராவது ஒருவர் உயிர்ப்பிழைக்கட்டும் அதுவரை என் தாயின் முலைப்பாலில்
கிடைத்த நம்பிக்கையுடன் சிறிது நேரம் சுவாசித்துக் கொள்கிறேன்.

சுபஸ்ரீ ஸ்ரீராம், துபாய்

# சர்வதேச...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

வைக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த அறிவிப்பை அமெரிக்க விடவில்லை. மேலும் அமெரிக்காவின் நிதி உதவியை நம்பி பாகிஸ்தான் பல வளர்ச்சித் திட்டங்களையும் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாகவே மேற்கொண்டு வந்தது. குறிப்பாக தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரில் அமெரிக்காவிடம் இருந்து சுமார் 33 மில்லியன் அமெரிக்க டொலரை பாகிஸ்தான் கடனாகப் பெற்றது.




பாகிஸ்தான் மீதான அமெரிக்காவின் கோபத்தால் இரண்டு விதமான ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. ஒன்று அமெரிக்காவின் நிதி நிறுத்தப்படுவதுடன் அமெரிக்காவிடம் ஒரு கடனாளியாக இருக்க வேண்டிய சூழல். உலக நாடுகளின் அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கும் அமெரிக்காவிடம் பகைத்துக் கொண்டு நம்மால் முன்னேற்றத்தை அடைய முடியுமா என்பதுதான் அந்த இரண்டாவது ஆபத்து.

இந்த இரண்டு விளைவுகளும் மிகப்பெரிய தாக்கத்தைப் பாகிஸ்தானில் ஏற்படுத்தும் என்பதை அந்நாட்டிற்குத் தெரிந்திருந்தது. இந்த இடத்தை அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளுக்கு மௌனம் காத்தால் அவர்கள் கூறுவது உண்மையாகி விடும் என்று கருதிய பாகிஸ்தான், தான் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்காக அமெரிக்காவுக்கே பதிலடி கொடுத்தது. அமெரிக்கா நினைப்பதுபோல எந்தத் தீவிரவாத நடவடிக்கையும் பாகிஸ்தானில் நடக்கவில்லை என்றும் தீவிரவாதத்தை ஊக்குவிக்கவில்லை என்றும் கூறியது.

தொடர்ந்து அமெரிக்கா அழுத்தம் கொடுக்க அடுத்து என்ன செய்யலாம் என்று மாற்று யோசனையில் பாகிஸ்தான் இறங்கியது. அப்பொழுதுதான் பாகிஸ்தானுக்குக் கை கொடுப்பதற்காக சீனா களத்தில் இறங்கியது. சீனாவின் தயவு தனக்குக் கிடைக்கும் என்ற சூழல் ஏற்பட்டவுடன் அமெரிக்காவுடனான உறவை முறித்துக்கொண்டு சீனாவுடனான உறவை புதுப்பிக்கக் களத்தில் இறங்கியது பாகிஸ்தான். அதாவது அமெரிக்க டொலருக்குப் பதிலாக இனி சீனாவின் Athid (yuan) பாகிஸ்தானின் பொதுத்துறை நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் தாராளமாகப் பயன்படுத்தலாம் எனப் பாகிஸ்தானின் ஸ்ரேற் வங்கி அறிவித்தது.

அமெரிக்காவை எதிர்க்கவும் அதே சமயத்தில் தனது போட்டி நாடான இந்தியாவின் வளர்ச்சியைத் தடுக்கவும் ஒரே கல்லில் இரண்டு நாடுகளையும் அடிப்பதற்காகப் பாகிஸ்தானை தனக்குச் சாதகமாக ஆக்குவதற்கு சீனா இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தது. சீனாவின் இந்த முயற்சிக்கு காலம் மிகச் சரியான வாய்ப்பு அளிப்பது போல அமைந்தது அமெரிக்கவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வார்த்தை போர். இதனை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்காக பாகிஸ்தானை தனிமை படுத்தும் அமெரிக்காவின் போக்கை தனக்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொள்ள பாகிஸ்தானுக்கு ஆதரவுக் கரம் நீட்டியது சீனா. அதாவது பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காகப் பாகிஸ்தான் எந்த நடவடிக் கைகளையும் முன்னெடுக்கவில்லை என அமெரிக்கா அபாண்டமான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததாக சீனா கொந்தளித்தது. பயங்கரவாத ஒழிப்பில் பாகிஸ்தான் செய்த தியாகங்கள் அமெரிக்காவுக்கு தெரியாதா? பாகிஸ்தானின் எத்தனை அதிபர்கள் பயங்கரவாதத்திற்காகத் தங்களின் உயிரை இழந்திருக்கின்றனர் என்று அமெரிக்காவிற்குத் தெரியாதா? என இரக்கப் பார்வை நீட்டியது சீனா. இதனால் மெய்சிலிர்த்துப்போன பாகிஸ்தான், சீனாவின் குரலுக்கு மனம் மகிழ்ந்தது.

பாகிஸ்தானின் இந்த மன மகிழ்வை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சீனா பாகிஸ்தானைப் புதிய பட்டுப்பாதைத் திட்டத்தில் கையெழுத்திடச் செய்தது. பட்டுப்பாதைப் பொருளாதார வழித்தடத் திட்டத்தை 55 பில்லியன் டொலர் மதிப்பில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் பாகிஸ்தானுக்கு உதவும் என அந்நாடு நம்புகிறது. ஆனால் சீனாவின் கணக்கோ வேறு. பாகிஸ்தானை தந்து காலனித்துவ நாடாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதாகக் கூறப்படுகிறது. இது அபாண்டமான குற்றச்சாட்டல்ல.

கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளிலும் சீனாவுக்கு எதிராவே பாகிஸ்தான் குடிமக்கள் போராட்டக் களத்திற்கு வந்து விட்டனர். அப்பொழுதெல்லாம் சீனா பாகிஸ்தான் அரசை தூண்டிவிட்டு அந்நாட்டு மக்கள் மீது வன்முறையைப் பிரயோகிப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. அம்பாந்தோட்ட துறைமுகத்தைத் தனக்கு உரிமையாக சீனா சொந்தம் கொண்டாடிய போதும் இலங்கையில் இதேபோன்ற போராட்டங்கள்தான் வெடித்தன. அப்போது ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவர்கள் இத்திட்டத்தால் இலங்கையின் வளர்ச்சிக்கு சீனா உதவும் என்றே கூறுகின்றனர். ஆனால் மக்களின் முடிவு வேறு ஒன்றாக இருக்கிறது. இலங்கையிலும் பாகிஸ்தனிலும் மக்கள் போராட்டத்தை அடக்கி வைக்க சீனா திரைமறைவில் இருந்து கொண்டு ஆயுதங்களை வழங்குவதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில் சீனா தன்னை சுற்றி இருக்கக்கூடிய நாடுகளை சில சமயங்களில் மிரட்டியும் பல சமயங்களில் அந்த நாடுகளில் இருக்கும் பலவீனங்களை தனக்கு சாதகமாக்கிக் கொண்டும் இருக்கிறது. கடன் உதவி செய்வதன் மூலம் அந்த நாடுகளில் தற்கால வளர்ச்சியை சீனா முன்னேற்றினாலும் அடுத்த சில ஆண்டுகளிலேயே பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளை முழுக்க முழுக்கத் தனது காலனித்துவ நாடுகளாக மாற்றும் முயற்யிலும் சீனா ஈடுபட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் தென்சீனக் கடற்பகுதியிலுள்ள பிலிபைன்ஸ், தைவான், வியட்நாம், மலேசியா உள்ளிட்ட நாடுகளை தனது காலனித்துவ நாடுகளாக மாற்றி வைத்துள்ளது சீனா. வெளிப்படையாகத் தெரியாவிடிலும் அடுத்த சில ஆண்டுகளில் சீனாவின் கட்டுப்பாட்டில் காலனித்துவ நாடுகளாகத்தான் அந்த நாடுகள் இருப்பதை உணர்ந்துகொள்ள வேண்டிய சூழலை சீனா உருவாக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதேபோல சீனாவோடு போட்டிபோடும் அளவிற்கு இந்தியாவை அதனைச் சுற்றியுள்ள நாடுகளின் பலவீனமான பொருளாதார கட்டமைப்பை பயன்படுத்திக் கட்டிப்போடும் முயற்சியிலும் சீனா இறங்கியிருக்கிறது.

தற்போதைய சூழலில் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் உள்நாட்டுக் கட்டமைப்பே கொரோனாத் தொற்றால் ஆட்டம் கண்டிருக்கிறது. இருப்பினும் சீனா நிலையான பொருளாதாரக் கட்டமைப்பு நோக்கிப் பயணித்து விட்டது. இந்தச் சூழலில் பார்த்தால் இந்தியாவில் கொரோனா பாதிப்பு உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவே உள்ளது. தற்போது இந்தியா சீனாவுக்குப் போட்டி நாடாக இருக்கிறது. அதனால் இந்தியாவை அடிபணிய வைக்க எந்த எல்லைக்கும் சீனா போகும் என்று கணிக்கப்படுகிறது. கொரோனா என்ற ஒற்றை ஆயுதத்தைக் கொண்டு ஒரே சமயத்தில் ஆசிய நாடுகளையும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளையும் கட்டிப் போட்டிருக்கிறது சீனா. இதனால் இந்த நூற்றாண்டின் வல்லரசாக சீனா இருக்குமென்று பொருளாதார வல்லுனர்கள் கருதுகின்றனர்.

## காலடி தொழுதிட கிடைக்கும் சொர்க்கம்!




10.05.2020 அன்னையர் தினம்

தாயைப்போல மனிததெய்வம்
 தரணியிலுண்டோ சொல்வீர்?
நோயைத்தவிர்த்து குழந்தைவாழ
 நொந்துடல்வருத்தி மருந்துண்பாள்
பாயைவிரித்துப் படுத்தாலுமிரவில்
 பலநாள்தூக்கம் தொலைப்பாள்
தாயை மறப்பவர் பெரும்சண்டாளர்
 தாய்மையை மதிப்பவரோ பண்பாளர்!


இருப்பதைக்கொண்டு திருப்தியாய் சமைத்து
 இனிதான கணவர் பிள்ளைகட்கிட்டு
நெருப்பெனஎரியும் தன்பசி போக்கிட
 நெகிழ்வுடன் நீராகாரமருந்திடும்
பொறுமைக்குரியவள் தாயன்றி யாரோ?
 பேசாத்தெய்வத்திற்கு இவளிணையாமோ?
அருமையிலுமருமை அம்மாவின் உறவு
 அவளின் அணைப்பே பிள்ளைக்குவரவு!

பத்துமாதம் வயிற்றிலே சுமப்பாள்
 பகலிரவாய் பிள்ளையைக்காப்பாள்
எத்துணை துயரங்கள் அணுகியபோதும்
 எல்லாம் சீராய் வென்றுமுடிப்பாள்
சொத்துசுகங்கள் பிள்ளைதானென்பாள்
 சோராமனதுடன் நாளுமுழைப்பாள்
செத்துமண்ணுள் சேரும்வரைக்கும்
 சேய்நலமொன்றே கருத்தினில்கொள்வாள்!

கொள்ளையன்பைக் கொட்டித்தருவாள்
 கோயிலாகவே குடும்பத்தைக்கொள்வாள்
பிள்ளைகளுக்கொன்றெனில் துடித்துப்போவாள்
 பிரியமெலாம் அவர்மேல்வைப்பாள்
வெள்ளைமனதுடன் அள்ளித்தருவாள்
 வெற்றிக்கு அவளே வழியுமமைப்பாள்
கள்ளையுண்டால் ஏற்படும்மயக்கம்
 காலடி தொழுதிட கிடைக்கும் சொர்க்கம்



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

## BASEMENT FOR RENT

**MIDLAND & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. No Parking, laundry. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.835.2003**

**MORNINGSIDE & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Close to all facilities. Avail. June, 2020.
Call **416.430.0999 / 647.287.0731**

**NEILSON & HWY 401**
2 Bedroom bsmt for rent. 1Parking. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.587.9118**

**FINCH & TAPSCOTT**
1 Bedroom & 2 Bedroom Bsmt for rent. Family or Females preferred. Close to all facilities. Internet, laundry & utilities included.
தொடர்புகளுக்கு: **416.726.4186**

**KENNEDY & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.826.3870 / 647.905.4914**

**14Th AVE. & 9Th LINE**
2 Bedroom new bsmt for rent. Sep.entrance, parking. Couple or family preferred. Close to Bus & school. Avail. immediately.
**416.829.3212 / 416.879.9603**

**MARKHAM & STEELES**
2 Bedroom walkout bsmt for rent. Laundry. Close to School & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.258.8755**

**MARKHAM & 14th AVENUE**
3 bedroom & 2 full washroom bsmt for rent. Sep. entrance. Sep. laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
3 bedroom , 2 washroom walkout basement For rent along with parking and laundry. Close to school & shopping centers. No smoking & no pets. Avail. June 01, 2020.
தொடர்புகளுக்கு: **647.981.1997**

## BASEMENT FOR RENT

**SCARB.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet, utilities. Close to all facilities. Avail. immediately.
**905.471.2444 / 647.998.0181**

மேலும் பக்கங்கள்
17, 18, 19

## ROOM FOR RENT

**MCCOWAN & SHEPPARD**
1 furnished room for rent in a condo Sep. washroom, laundry, gym, pool, wifi etc. Close to all facilities, STC, 401 & Centennial
தொடர்புகளுக்கு: **416.844.3708**

**MARKHAM & STEELES**
1Rooms bsmt for rent Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.587.6564 / 647.678.0611**

**PHARMACY & FINCH**
1 Room for rent. Unlimited Internet, Sep. Washroom. Close to all facilities. Avail. May 01, 2020.
**647.201.1222 / 647.261.0216**

**MARKHAM & ELESMERE**
Room for rent in bangalo house main floor. Close to all facilities. All included wifi and parking. Avail. May 01, 2020.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

**KENNEDY & ELLESMERE**
1 Room for rent. Parking, laundry. Female Preferred. Close to all facilities. Avail. May 01, 2020.
**416.474.4958/416.474.4935**

**MCCOWAN & DENISON**
1 Bedroom for rent. Sep.washroom, parking, laundry, utilities. Female preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.678.2599**

**BRIMLEY & ELLESMERE**
1 Bedroom for rent in main floor. only for female. Close to all facilities. Avail. From April.
தொடர்புகளுக்கு: **416.906.5013**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom for rent. Parking, laundry. Male preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

## BASEMENT FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Parking,laundry. Close to all facilities. Available May 01, 2020
தொடர்புகளுக்கு: **416.219.6062**

### வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
வாடகைக்கு உள்ளது
அழையுங்கள்.
**647.861.8240**

## HOUSE FOR RENT

**NELSON & MCLEVIN**
3 Bedroom house for rent. 3 washroom & 3 Balcony, 1 parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.786.6161**

**TAPSCOTT & FINCH**
3 Bedroom & 2 washroom house for rent. Rent $2400+50% utilities. No smoke, Alcohol or pets. Avail. immediately.
**647.855.2148/647.985.6101**

## ROOM FOR RENT

**MCCOWAN & EGLINTON**
1 Room for rent in a Condo. Christian female only. Super clean, gym, security. 5 minutes to Kennedy station. Close to all Facilities. Avail. immediately.
**Call: 416.710.5852**

## HOUSE FOR SALE/RENT

**SCARBOROUGH**
**SHEPPARD & McCOWAN**
2 Bedroom condo apartment with one parking for sale $299,900.00

**AJAX**
**HARWOOD & KINGSTON**
3 bedroom brick detached bungalows with finished basement apartment with 3 bedrooms. for sale
**$600,000.00**

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

## APARTMENT FOR RENT

**DONMILLES & EGLINTON**
2 bedroom, apartment for rent with furniture. Students welcome. Aval. immediately
**Call me : 647. 296. 9565**

## HOUSE/BASEMENT FOR RENT

**BELLAMY & BRIMORTON**
3 bedroom **house**( main floor)for rent. All amenities in walking distance.
1 bedroom **basement** apartment also for rent. Sep. entrance. 1 parking, laundry. Rent+utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.505.9465**

## HOUSE FOR SALE/RENT

**SCARBOROUGH**
3 Bedroom & 2 washroom House for Rent / sale. Convenient location
**Please contact for further details:**
**416.648.7283**

## மணமகன் தேவை

91இல் பிறந்த (5'5") (IT manager) ஆக Mississaugaவில் பணிபுரியும், கனடாவில் பட்டம் பெற்ற Registration முறிவடைந்த (R.C) மணமகளுக்குக் கனடாவில் மணமகன் தேவை.
**Contact : 647-456-1943** (after 6 p.m)

## BASEMENT FOR RENT

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom, kitchen, living room, 1 full washroom BSMT Rent available from May 01, 2020.
**call @ 416.953.0370**

## ROOM FOR RENT

**MCCOWAN & DENNISON**
Room For Rent in Markham.Close to Bus stop. Utilities included. Avail. Immediately.
**Contact : Baskaren +1 (437) 344-1589**
**Baby : 416.522.3314**

### ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.
**416.890.6497**
**srisai2912@hotmail.com**

### திருமணசேவை

திருமண சேவைக்கு
தொடர்பு கொள்ளவும்
**905.607.3896**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**

**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## வயோதிபர் பராமரிப்பு

வயோதிபர் ஒருவரை வீட்டில் வைத்து பராமரிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **416.275.6466**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு
அழையுங்கள்: **416.880.5952**

## TAILORING

**SCARBOROUGHஇல்**
Saree Blouses $25க்கு தைத்துக் கொடுக்கப்படும்.
**V G Tailors:**
**647.621.3694**

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.
Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .
For more info call : **647.274.0300**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் வாழும் Wheel Chairஇல் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை.
Full time LIVE-IN caregiver (female) needed asap in Scarborough.
தொடர்புகளுக்கு: **437.223.7767**

## MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university

*Special classes*
- .Advanced function
- .Calculus & vectors
- .Data management

*All Classes available in Scarborough & Stouffville*



Mr.S.F.Xavier (Teacher)

**Contact: 647.340.9490 / 416.732.2228**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## MOVING & DELIVERY

புதிய, பாவித்த Fridge, Stove விற்பனைக்கு உண்டு.
பழைய இரும்பு பொருட்கள், Electonic பொருட்கள் இலவசமாக எடுக்கப்படும்.
Junk Removal
Call Rajan: **647.524.1320**

## உடனடி வாடகைக்கு விற்பனைக்கு

**வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க வாடகைக்கு விட வாடகைக்கு பெற்றுக்கொள்ள** அழையுங்கள்
**Jey - 416.816.9011**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள்
வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.
**MOVING / DELIVERY AVAILABLE.** தொடர்புகளுக்கு: பிறேம்-**647.835.5244**

## யோகா சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் | சுபமுகூர்த்தம் கணித்தல்
பலன் பார்த்தல் | சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

## PTR DOORS & WINDOWS

OVER 14 YEARS EXPERIENCE
**RESIDENTIAL & COMMERCIAL**




- Custom Doors & Windows
- Front & Patio Door
- Replacement (Doors & Windows)
- California Shutters & Blinds
- Separate Entrance Door for Basement
- Replace Caulking
- Painting
- Pot Lights Installation

FREE ESTIMATE! Call Today

24 hours Emergency Service
We Fix Broken Glass Windows & Doors

**RAVI : 416-825-9482 KANNA : 647-297-7815**
email : ptrrenovation@gmail.com

## BUSINESS / PROPERTY SALE

### CONVENIENCE STORE BUSINESS FOR SALE

Convenience store Business for sale in Brighton, Ontario.
With inventory $20k. Weekly sale 7k to 8 k.
40 minutes drive east from Oshawa.
if anyone interested.
Please contact : **416.906.5013**

## PROPERTY FOR SALE

Property with big corner lot for sale in Brighton Ontario on highway 2. With 5 rental units and one convenience store. Suitable to start your own business. Rental income Approx. $5200 per month. if anyone interested.
Please contact : **416.906.5013**

## BUSINESS PARTENER WANTED

Looking for working partner for convenience store business. This business is in Brighton Ontario.
1 Hour driveeast from Scarborough.
If anyone interested
Please contact : **416.906.5013**

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

*** Scarborough** - Ellesmere / Military trail – Bsmt**
Room For Students Near U Of T Scarborough. Furnished Room Available. Everything Included. 5 Minutes Walk To U Of T / Centennial College. **[Asking $520/m]**

*** Toronto** – Charles / Bloor / Yonge – Condo Apt**
(1+1Brm + 1Bath) Located at Yong & Bloor. 24 Hrs Concierge, Party, Yoga, Theatre Rooms,Yorkville Neighborhood. Close To Ryerson University, U Of T and Subways. **[ Asking $2350/m]**

***Oshawa – Simcoe / Conlin - Room***
Room For Rent From May 1st 2020. Students are welcome. Close To Oshawa University. **[Asking $650/m]**

*** Bowmanville** – **Hwy 401** / Hwy 2 – Detached – House**
Furnished large home with 4 or 6 Bedroom Available For Short & Long Term Rent.**[ Call 647-913-9241]**

***Markham – Kennedy / Hwy 7**- Bungalow House**
(4 Brm + 1.5 Bath) including half-finished basement **[Asking 2600/m]**

***Scarborough - Morningside** / Sheppard – Detached – Rooms**
Rooms available for Female Students or Couples. Close To Scarborough U Of T, Centennial College, Pan Am Ctr, Hwy 401, Hospital.**[ Call 647-913-9241]**

*** Oshawa** – Simcoe / Conlin Rd – Town House**
(3 Brm + 2 Bath) Avilabe from May 1st. **[Asking $1950/m]**

***Scarborough** – Morningside / Finch – Townhouse**
(3Brm +2 Bath) 2 Parking Space. Available from May 10th. **[Asking $2500/m]**

*** Scarborough** – Markham / Kingston – Condo Town House**
3 Brm House with finished basement. **[Asking $2500/m]**

***Pickering** – Taunton Rd / Brock Rd – Condo Town House**
(2 Brm + 3 Bath) 1 Parking available. 1100 Sf **[Asking 2000/m]**

***Scarborough** – Walkout basement**
(1 Bath + 1 Bath) Walkout basement available immediately.

## வீட்டு முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு

- வாடகைக்கு விட சரியான வீட்டை எப்படி தெரிந்தெடுப்பது.
- அந்த வீடுக்கான கடனை எப்படிப்பெறுவது.
- சரியான வாடகையாளர்களை எப்படி கண்டுபிடிப்பது.
- அந்த வீட்டை சரியாக எப்படி நிர்வகித்து கூடிய லாபம் பெறுவது.

இதற்கான கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புவர்கள்

**தொடர்பு கொள்ளவும்: கரு கந்தையா: 416-284-5555**
watsonpm1989@gmail.com

## SEMINAR FOR INVESTORS

- How to select the right property to buy as an investment?
- How to qualify for mortgage for those properties?
- How to find the right tenant?
- How to manage the property to get high net income?

If you are interested contact us for more details! Limited Seats!

**Contact: Karu Kandiah: 416-616-7278**
watsonpm1989@gmail.com

# MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!
## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

**எமது சேவைகள்:**

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

***You can relax while we take care of your investment property!***

**WATSON**
PROPERTY
MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



Karu Kandiah Director
30+ Years in Real Estate








# ஆதன வியாபாரம் எதிர்நோக்கும் நெருக்கடி

இன்றைய பொருளாதார நிலை: மார்ச் 2020இன் ஆரம்பத்திலிருந்தே உலகம் முழுவதும் நெருக்கடியில் இருந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. பங்குச் சந்தையும் (stock market) மிகச் சரிவான நிலையிலிருந்து மேல்நோக்கிக் வந்து கொண்டிருக்கிறது. மிக முக்கிய நாளாக மார்ச் 23, 2020இனை கொள்ளலாம். எதிர்காலத்தில் இந்த நிலையைவிட கீழே சென்றாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

சீனாவின் பொருளாதாரம் முக்கியமாக பொருட்களின் உற்பத்தியிலும் அவற்றை ஏற்றுமதி செய்வதிலும் தங்கியுள்ளது. சீனாவின் பொருளாதாரம் போலல்லாது வட அமெரிக்கப் பொருளாதாரம் அதிகமாக உள்ளூர் மக்களின் பாவனையிலும் நிதி நிலைக்குரிய நிர்வாகத்திலும் (financial services business) தங்கியுள்ளது. COVID-19இனால் உருவாக்கப்பட்ட பொருளாதார நெருக்கடி 2008/2009இல் ஏற்பட்டதைவிட வேறுபட்டது. 2008/2009இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி முக்கியமாக Wall Street இலுள்ள New York Stock Exchange (NYSE)இலே ஏற்பட்டு, மெல்லமாக மற்றய உலக நாடுகளுக்கும் பரவியது. COVID-19இனால் இந்த நிலைமை ஒரே சந்தர்ப்பத்தில் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது மட்டுமல்லாமல் பொருளாதாரத்தை முற்றாக ஸ்தம்பிக்க செய்துவிட்டது. 2009இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product - GDP) அமெரிக்காவில் 3.1%இனாலும் கனடாவில் 2.5%இனாலும் இறக்கம் காணப்பட்டது. ஆனால் 2020இல் நிலைமை இதைவிட மிக மோசமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2008/2009இல் வேலை இல்லாதோரின் மிகக்கூடிய எண்ணிக்கையாக 6.3% ஆகவே காணப்பட்டது. ஆனால் 2020இல் அமெரிக்காவில் இந்த எண்ணிக்கை 20%ஐ விட அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. கனேடிய மத்திய அரசு மிகப் பெரிய அளவில் பணத்தை செலவு செய்கிறது. இதனால் எதிர்காலத்தில் கனேடிய டொலரின் பெறுமதியிலும் பெரிய பாதிப்பு ஏற்படலாம். அமெரிக்க டொலரின் 60 சதத்திற்குச் சமமாக வரலாமென எதிர் பார்க்கப்படுகின்றது. பொதுவாக கனேடிய பொருளாதாரம் அதன் வியாபாரம், நிதி நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் ஆற்றல் சக்தி (Energy) என்பவற் றில் தங்கியுள்ளது. இன்றைய நிலையில் இந்த மூன்று துறைகளுமே மிகவும் நெருக்கடியான நிலையில் உள்ளன.

பொதுவாக, பொருளாதார இறக்க காலத்தில் ஆதன வியாபாரத்தில் சந்தை மந்த நிலையை அடையும்போது விற்பனைக்கு வரும் (supply) ஆதனங் களில் எண்ணிக்கையைவிட விற்பனை யாகும் (demand) ஆதனங்களின் எண்ணிக்கை குறையும். இதனால் அதிகமாக ஆதனங்கள் சந்தையில் விற்பனைக்கு இருக்கும். இதனால் ஆதனங்களின் விலையில் இறக்கம் ஏற்படலாம். இன்றைய நிலையில் அதிகமான முதலீட்டாளர்கள் சந்தையில் உள்ளனர். இவர்கள் தமது ஆதனங்களை விற்கத் தொடங்கினால் மேலும் விலை இறங்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். இந்த விலையிறக்கம் 2020ஆம் ஆண்டின் இறுதிவரை தொடரலாம். 2020ஆம் ஆண்டில் கனடாவுக்கு வரும் புதிய வரவாளர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் பாதிப்பும் ஆதனங்களின் வாடகை / விற்பனையில் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆதன வியாபாரத்தில் தங்கியுள்ள வேறு பல தொழில்களுக்கும் பொருளாதாரத் தில் பாதிப்பு ஏற்படலாம். உதாரணமாக ஆதன வியாபாரத்தில் சார்ந்துள்ள நிதி நிறுவனங்களின் சேவைகள் குறைந்து அவற்றின் வருமானத்தில் இழப்பு ஏற்படலாம். இதனால் இங்கு வேலை செய்வோர் வேலையை இழக்க நேரிடலாம்.

ஆதனம் வாங்குவது என்பது ஒரு நீண்ட கால முதலீடு. ஓரிரு வருடங்களில் நிலைமை மாறிவிடும். இதுவும் தாண்டிப் போகும். அத்துடன் விமானத்தில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை அதிக அளவில் குறைந்திருப்பதாலும் சகல விமான நிறுவனங்களும் தமது சேவை களைக் குறைத்து அல்லது முற்றாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாலும், எரிபொருளின் விலையிலும், பாவனையிலும் பாரிய இறக்கம் ஏற்பட்டுள்ளது. வட அமெரிக்காவின் முக்கியமான மூன்று பொருளாதார தூண்களும், நெருக்கடியில் இருப்பதால் பொருளாதார இறக்கம் தவிர்க்க முடியாமலே இருக்கும். ஆனால் இவை யாவும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மாறியே தீரும். மாற்றம் மாறாதது.



# ஊரடங்குக்குப் பிறகு என்னை பாடகியாகவும் நீங்கள் பார்க்கலாம்!

**நேர்காணல் :** ராஷி கண்ணா **சந்திப்பு: கண்ணன்**

தமிழ் திரையுலகின் இன்றைய இளம் நாயகிகளில், வசீகரமான அழகும் துள்ளலான நடிப்பும் ராஷி கண்ணாவுக்கு பட வாய்ப்புகளை குவித்த வண்ணம் இருக்கின்றன. 'மெட்ராஸ் கஃபே' என்ற இந்தி படத்தின் மூலம் அறிமுகமானவர் தொடர்ந்து, 'Oohalu Gusagusalade' என்ற படத்தின் மூலம் தெலுங்கில் அறிமுக மானர். அதன்பிறகு தெலுங்கு திரைத் துறையில் முன்னணி கதாநாயகியாக திகழ்ந்தார். தமிழில் விஜய் சேதுபதி, நயன்தாரா, அதர்வா ஆகியோர் நடித்த 'இமைக்கா நொடிகள்' படத்தின் மூலம் அறிமுகமானவர் அடுத்து ஜெயம் ரவியின் 'அடங்க மறு', விஷாலின் 'அயோக்யா', விஜய் சேதுபதியின் 'சங்கத்தமிழன்' ஆகிய படங்களில் தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தினார். தற்போது 'சைத்தான் கா பச்சா', 'அரண்மனை 3' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

திரையில் தனக்கு அளித்த கதா பாத்திரத்தை எந்த சிரத்தையும் இல்லாமல் சர்வ சாதாரணமாக நடித்து அதற்கு உயிர் கொடுக்கிறார். நடிகரை மையமாக கொண்ட படங்களில்கூட தன் முத்திரையை பதிக்கிறார். தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை குறித்து தன் ரசிகர்களுக்கும் ஊடகத்திற்கும் மறைத்தே வைத்திருக்கும் இந்த நாயகியிடம் உரையாடும்போது ஒரு பெண்ணாகவும் ஒரு நடிகையாகவும் அவர் யார் என்று நாம் வைத்திருந்த பிம்பத்தை மறு யோசனை செய்கிறோம்.

**'விளம்பரம்' இதழுக்காக ராஷி கண்ணாவை சந்தித்தோம்'**

**ஒரு நடிகையாக உங்கள் வாழ்க்கை இப்போது எப்படி செல்கிறது?**

என் வாழ்க்கையில் இப்போதுதான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். ஊரடங்குக்கு முன்னர், கடந்த சில மாதங்கள் நான் செய்த வேலைகள் அற்புதமாக இருந்தது மனநிறைவை தந்தது. நாம் நடிக்கும் எல்லா திரைப் படங்களும் வெற்றி ஆகுமென்று சொல்ல முடியாது. ஒரு படம் வெற்றி அடையப் பல காரணங்கள் இருக்கும். வெற்றியோ தோல்வியோ நாம் செய்யும் வேலையில் உண்மையாக இருந்தால் மக்கள் நிச்சயம் கவனிப்பர். தனிநபராக யாரையும் குற்றம் சொல்லாத வளாக, மன்னிக்கும் குணமுடையவளாக மாறியுள்ளேன். இதைவிட எனக்கு என்ன வேண்டும்?

**ஊரடங்கில் வீட்டில் எப்படி பொழுதுபோகிறது?**

எல்லோரையும் போல் வீட்டிலேயேதான் இருக்கிறேன். ஆனால், உடற்பயிற்சி, யோகா, ஓவியம், சமையல் என்று நேரம் சரியாக இருக்கிறது. உடல் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல மன ஆரோக்கியத்துக்கும் யோகா சிறந்த வழி.



நான் ஒரு நல்ல பாடகரும்கூட. அது இங்கு யாருக்கும் தெரியாது. அதை நான் கூறவும் இல்லை. தெலுங்கு படத்தில் நடிக்கும்போது படப்பிடிப்பில் நான் பாடுவதைப் பார்த்து எனக்கு வாய்ப்பளித் தனர். நீங்கள் ஏன் பின்னணி பாடகியாக முயற்சி செய்யக்கூடாது என இப்போது கேட்கின்றனர். அந்த வகையில் சில பயற்சிகளையும் இந்த ஊரடங்கில் செய்து வருகிறேன். நான் பாடும் வீடியோ ஒன்றை டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளேன், பார்த்தீர்களா?

**இந்தியாவில் கொரோனா தொற்று பரவலுக்கு காரணமாக ஒரு குறிப்பிட்ட மத்தியினர் மீது குற்றம் சாட்டப்படுகிறதே, இதை எப்படி பார்க்கிறீர்கள்?**

இந்தியாவில் உள்ள 99.99 சதவீத இந்துக்கள் கோமியம் குடிப்பதில்லை. கோமியம் குடித்தால் கொரோனா குணமாகிவிடும் என நம்புவதுமில்லை. அதேபோல், 99.99 சதவீத முஸ்லிம் மக்கள் தப்லீக் ஜமாஅத் நிகழ்வை ஆதரிக்கவில்லை. மவுலானா சாத் சொன்னதையும் ஏற்கவில்லை. இந்தக் கொரோனா தொற்று மதச்சார்பற்றது. அது மதத்தின் அடிப்படையில் மனிதர்களை பிரிப்பதில்லை. அது சமத்துவத்தை நம்பு கிறது. சாதி, மதம், வசதிகள், அந்தஸ்து என யாராக இருந்தாலும் அவர்களை பாதித்துக் சாகடிக்கிறது. ஒருவரை ஒருவர் குற்றம் சொல்வதை நிறுத்திவிட்டு கொரோனாவிற்கு எதிரான இந்தப் போரில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

**விஜய் சேதுபதியோடு நீங்கள் சேர்ந்து நடித்த 'சங்கத் தமிழன்' மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படம். ஆனால், சரியாக போகவில்லை. அவருடன் நடித்த அனுபவம் எப்படி இருந்து?**

அவரைப் போன்ற நடிகர்களோடு நடிக்கும்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)


MOHAN

HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis

Also other Acute & Chronic Problems

HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


# அம்மா



அம்மா என்ற மூன்றெழுத்தில்
அன்ப பிறந்ததை அறிவேனம்மா
அகிலம் உருவாக ஆணிவேராக
ஆனவரும் நீயே என்பதையும் உணர்ந்தேனம்மா

கருணைக் கடலாய் மலர்ந்து படைக்கும்
கடவுளுக்கு உறுதுணையாய் இருந்து
காக்கும் தொழிலையும் செய்து என்னை
காலம் முழுவதும் சுமந்தாயம்மா

காற்றினில் வரும் கீதம் போல் என் கனவில்
காதினில் கேட்குதம்மா உந்தன்
கனிவான தாலாட்டுப்பாடல் அதில்
காணுகிறேன் உன்னையம்மா

நித்தம் உன் மடியில் நீந்திக்கிடக்கையிலே
நின்மதியைக் கண்டேனம்மா அன்று
நிலாக்காட்டி நீ எனக்கு பருக்கிய
நீர் ஆகாரம் அதை நினைக்க இனிக்குதம்மா

மலர்களிலே மல்லிகைப்பூப்போல் உன்
மனம் என்றைக்கும் வெள்ளையம்மா
மற்றவர்க்கு நீ உதவுவதில் என்றும்
மனம் கோணியதை நான் கண்டதில்லையம்மா

பலநூல்கள் நீ கற்றதில்லை உலகப்
படிப்பறிவும் அதிகமில்லை அன்றுன்னை
பாராட்ட முடியாவிட்டாலும் உன் அறிவை
பார்த்து வியந்தேனம்மா

தெய்வங்கள் பல இருந்தாலும் ஏதொரு
தெய்வத்தையும் நேரில் கண்டதில்லை
தெய்வத்துள் தெய்வமென பேசும் ஒரு
தெய்வமாய் உன்னைக் கண்டேனம்மா




கவிநாதம் பரந்தாமன்

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

## யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்



கந்தசாமி முத்துராஜா

### முகவுரை

ஊர் வரலாறுகளை வெட்ட வெளிச்சமாக எழுதும்போது, அடிநிலை மக்களின் பாரம்பரிய வாழ்க்கைச் செய்திகள் தெளிவாக மேற்கிளம்புவது இயல்பு. இதன் மூலம் வரலாறு, மொழி, மானிடவியல் அம்சங்கள் போன்றவற்றை விபரமாக ஆய்வுசெய்ய வாய்ப்புள்ளது. 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளிலேயே இங்கிலாந்தில் நாட்டுப்புறச் செய்திகளைத் தொகுக்கத் தொடங்கிவிட்டன. இம்முறைமையில் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும், போதாமை இருப்பது போல் தெரிகிறது.

ஆழியவளைக் கிராமத்தின் வரலாற்றை 'ஆழியவளை-யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபுகளும் மாற்றங்களும்' எனும் தலைப்பில் ஆய்வுக்கு எடுத்துள்ளேன். கட்டுரையை: ஊரும் ஊர் அமைப்பும், பிழைப்பும் உழைப்பும், சடங்குகள் நம்பிக்கைகள், பாரம்பரியக் கலை இலக்கியங்கள், ஏற்பட்டுவரும் மாற்றங்கள் எனும் ஐந்து தலைப்புக்களில் ஆய்வுசெய்துள்ளேன்.

ஆய்வில், மூதாதையரின் சமூக நடைமுறைகள், தொழில் முறைகள், சமூக ஒழுங்குகள், சமய ஒழுக்க முறைகள், வாழ்க்கை வட்டச் சடங்குகள் சமய நம்பிக்கைகள், பொருளாதார நடவடிக்கைகள், நாட்டார் இலக்கியங்கள், கலைகள், பொழுதுபோக்குகள், அரசியல் நிர்வாக ஒழுங்குகள் முதலான பல்வேறு வாழவியற் கூறுகள் பற்றி விளக்கியுள்ளேன். எதுவித கூச்சமோ தயக்கமோ இன்றி இயன்றவரை உள்ளதை உள்ளவாறே விபரித்துள்ளேன். அந்தச்சமூக வாழ்க்கையின் உயிர்மூச்சு உணரப்படும் வகையில் அலுப்பு, பஞ்சி, பெடியன் போன்ற 'கிளைமொழி'ச் சொற்களை அவை வரவேண்டிய இடங்களில் அப்படியே பதிந்துள்ளேன். வழக்குச் சொற்களுக்கான விளக்கங்களைப் பின்னிணைப்பில் விபரமாகத் தந்துள்ளேன். பிற்சேர்க்கையில் தற்போதைய நவீன வாக்குப் போக்குகளையும் வழக்கங்களையும் சுருக்கமாக விளக்கியுள்ளேன்.

இக்கட்டுரை ஆக்கத்தின்பொழுது சாதிப்பெயர்களை உள்ளவாறே குறிப்பிட்டுள்ளேன். தமிழர் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இந்நாட்களில் சாதிப் பெயர்களை உள்ளவாறே கூறுவது பொருத்தம் உடையதோ என்பது அடிக்கடி கிளப்பப்படும் ஒரு பிரச்சினையாகும். ஆயினும் சமூக யதார்த்தத்தை மறந்து அல்லது மறைத்து நாம் தொழிற்படக் கூடாது என்பதனால் அப்பெயர்களை அவ்வாறே குறிப்பிட்டுள்ளேன்.

இனி, தனி ஆய்வுக்காக எடுக்கப்பட்ட தலைப்பாகும். எடுக்கப்பட்டதன் பிரதான காரணம் யாழ்ப்பாணத்தில் குறிப்பாக 1980களின் பின்னர் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் காரணமாகத் தோன்றியுள்ள பெரு மாற்றங்களுக்கு முன்னர் நிலவிய வாழ்க்கை மரபினையும் வாழ்வியல் பாரம்பரியத்தினையும் மீட்டுக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே இம்முயற்சியைக் கொண்டேன். யாழ்ப்பாணத்தின் சில பின்தங்கிய கிராமங்களில் நவீனமயவாக்கம் ஏற்படுவதற்கு முன்னர் இருந்த நிலையை ஒளிவுமறைவின்றி எடுத்துக்கூற முயன்றுள்ளேன். இத்தகைய ஒரு முயற்சி எதிர்கால வளர்ச்சிகள் அமைய வேண்டியதற்கான அடிக்கட்டு மானங்களைத் தருவதாக இருக்குமென்று கருதுகின்றேன்.

இந்த நூலை வாசிக்கப்போகும் மக்களிற் பலர், தாமும் இக்கட்டுமானத்தில் நின்றோ அல்லது இதிலும் பார்க்க அடிநிலை சென்றோ தமது ஊர் வரலாறுகளை எழுதுவர் என்ற ஓர் எண்ணப்பாடும் என் மனதில் தோன்றுகிறது.

அன்புக்குரிய அண்ணர் முதுபேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுடன் 2000ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழக விருந்தினர் தங்குமிட விடுதியில் ஆய்வுக் கட்டுரைக்கான தலைப்புப் பற்றி வினவினேன். அப்பொழுது எனது பிறந்த ஊரின் வரலாற்றை எழுதும்படியும் அதை நூலாகவும் போடலாம் என்றும் கூறி என்னை ஊக்குவித்தார். பின்னர் தலைப்பிற்கு அத்தியாயம் வகுப்பதிலும் உதவினார். விடய மயக்கங்களிலும் ஆலோசனைகளைத் தொலைபேசி மூலம் வழங்கினார். 'ஆழியவளை' என்ற பெயருக்கான ஒரு விளக்கத்தையும் தந்தார். பட்டப்படிப்புத் தொடங்கிய காலந்தொட்டுப் புத்தகங்களைத் தெரிவுசெய்து தந்தும் அனுப்பியும் உதவினார். அவரது உதவி எமது B.A. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வாய்ப்பாகவும் அமைந்தது. அவருக்கு என்றென்றும் நான் கடப்பாடு உடையேன்.

இப்புத்தகம் நூலாக்கம் பெறும்பொழுது பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் முன்னுரையையும், பேராசிரியர் தொ. பரமசிவன் அவர்கள் அணிந்துரையையும் தந்து உதவினர். அவர்கள் இருவருக்கும் என்றென்றும் நான் கடப்பாடுடையேன்.

ஆய்வுக் கட்டுரையை நெறிப்படுத்தி உதவுமாறு எமது விரிவுரையாளர்களில் ஒருவரான கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களை கேட்டுக்கொண்டேன். அவர் உடனடியாகவே எனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். இது அவரின் பெருந்தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்தத் தமிழ்ப் பட்டப்படிப்பை ரொறொன்ரோ - கனடாவில் ஆரம்பித்து வைத்தோரில் அவரும் ஒருவராவர். அன்றிலிருந்து ஈழவரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, அகப்பொருள் இலக்கணம், புறப்பொருள் இலக்கணம், தமிழர் வரலாறு என்பவற்றை எமக்குக் கற்றுத்தந்தார்.

சுகயீனத்தின் மத்தியிலும் தனது வீட்டிற்கு இருமுறை என்னை அன்புடன் அழைத்து, இக்கட்டுரையில் உள்ள குறைகளைத் திருத்தி, நிறைகளைப் பாராட்டி, கட்டுரையை உறுதிப்படுத்தியும் தந்தார். பேராசிரியர் பாலசுந்தரத்துக்கு என்றென்றும் நான் கடப்பாடு உடையேன்.

முதுபேராசிரியர் சிவத்தம்பி, ஆய்வுக் கட்டுரைக்கான தலைப்பைத் தந்தபோது ஏதோ சிறிதளவுதான் எழுதலாம் என்று நினைத்தேன். ஆனால் எழுதத் தொடங்கிய பின் பல தகவல்களை வெளிப்படுத்த வேண்டிய தேவை இருப்பதை அறிந்து கொண்டேன். அவரது தூண்டுதல் நான் வளர்ந்த ஊர் பற்றிய ஓர் ஆசையாக வெளிக்கிளம்பியது. இற்றைவரை இந்த ஊரைப்பற்றி யாரும் வரலாறு எழுதியதாகத் தெரியவில்லை. 'பேசாப்பொருளாக' எழுத்தின்றிக் காலங்காலமாகப் புதைந்திருந்த பல தகவல்களை இயலுமானவரை எழுத்தில் பேசியிருப்பது எனக்கு மனநிறைவைத் தருகின்றது.

பிற்குறிப்பு: பிற்சேர்க்கையாக இடம் பெற்றுள்ள அத்தியாயத்தை எழுதும் பொழுது இயன்ற அளவு உணர்ச்சிகள் அபிப்பிராயங்களைத் தவிர்ந்த தரவுக் கையளிப்பாகவே எழுதப்பெற்றுள்ளன.

இவ்வாறு எழுதியுள்ளமைக்கான காரணம் இக்கிராமத்தில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றத்தின் தன்மையைக் காய்தல் உவத்தலற்ற வகையில் வாசகர்கள் மதிப்பீடு செய்து கொள்வதற்காகவே ஆகும்.

- கந்தசாமி முத்துராஜா

## பசிக்கு இல்லை விடுமுறை!

உலகம் கண்டிராத விடுமுறை
உலகளவில் முதல் விடுமுறை
குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடும் விடுமுறை
வீட்டுக்குள்ளே மகிழ்ச்சியைக் காணும் விடுமுறை
வீட்டை விட்டு வெளியில் வரமுடியாத விடுமுறை
வாழ்க்கையைப் பல கோணங்களில் புரிய வைக்கும் விடுமுறை
வாழ்க்கையில் இப்படி இனி வரக்கூடாத ஒரு விடுமுறை
வாகனங்கள் இல்லாத விடுமுறை
பிள்ளைகளுக்கு சிறப்பு வகுப்புகள் இல்லாத விடுமுறை
சுற்றுலா இல்லாத நீண்ட விடுமுறை
சுற்றத்தார் வீடுகளுக்குச் செல்லாத விடுமுறை
திருவிழாக்கள் இல்லாத விடுமுறை
எது எல்லாம் இல்லாமல்
மனிதன் வாழ முடியும் எனப் புரிய வைத்த விடுமுறை
செலவுகள் குறைவான விடுமுறை
உலகமே நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடிய விடுமுறை
இயற்கையைப் பாதுகாக்கும் விடுமுறை
இருப்பினும் பெண்களுக்கு இல்லை விடுமுறை
ஏனென்றால் பசிக்கு இல்லை விடுமுறை!



## சமய நல்லிணக்கம் தேடி...

ஆம்...
உலகெங்கும் உன்னைத்
தேடித் திரிகிறேன் - நீயோ
கானல் நீராய் மறைகிறாய்...
ஒவ்வொரு நாட்டிலும்
ஒவ்வொரு ஊரிலும்
ஏன் ஒவ்வொரு தெருவிலும்
உன்னைத் தேடி அலைகிறேன்
எங்கு சென்று ஒழிந்தாயோ!
வரலாற்றில் நீ இல்லாத
இடமே இல்லை என்னும்
நம்பிக்கையுடன் மேலும் திரிகிறேன்
அய்யகோ...எங்கும் ஜாதிக் கலவரம்
அய்யகோ...எங்கும் மதக்கலவரம்
எதிலும் மதச்சாயம்
இவை எல்லாம் என் நம்பிக்கையைச்
சாய்த்தது என் தேடல் பொய்த்தது
ஓய்ந்து தேய்ந்து
அயர்ந்தே போனேன்... பின்னர்
ஒரு புயல் வெள்ளம்...
அங்கு கிடைத்தாய் நீ
மனிதநேயம் என்னும் மறு உருவில்
ஜல்லிக்கட்டில்,
குடியுரிமைப் போராட்டங்களிலும்,



வெவ்வேறு உருவில்
நீ தோன்றினாய்
உன் மாற்றுருவில்
மகிழ்ந்து போனேன்!
புது நம்பிக்கை பிறந்தது
உன் புத்துயிரை கண்டு.
நீ மாயவில்லை நீ ஓயவில்லை
நீ ஒழியவும் மாட்டாய்!

பைஜுர் நிஷா

# ஊரடங்கு...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

போது நிறைய கற்றுக்கொள்ளலாம். முதல்நாள் படப்பிடிப்பின் போது எனக்கு பயமாக இருந்தது. ஒரு காட்சியில் அவர் யதார்த்தமாக பார்த்தபோது, என் வசனத்தைக்கூட மறந்துவிட்டேன் (சிரிக்கிறார்). அவரது கண்களே பேசுகிறது. படப்பிடிப்பு தளத்திலேயே தன்னுடைய உடல்மொழியையும் வசனங்களையும் மெருகேற்றிக் கொள்கிறார். படப்பிடிப்பு தளத்தில் நாங்கள் இருவரும் நிறைய விவாதம் செய்வோம். உண்மையிலேயே விஜய் சேதுபதியோடு மிகவும் சந்தோஷமாக நடித்தேன்.

மற்றபடி நான் நடித்த படம் வெற்றியடையுமா தோல்வி அடையுமா என பார்ப்பதில் எனக்கு ஆர்வம் இருப்பதில்லை. அந்த ஓட்டத்தில் நானும் செல்ல விரும்புவேன், அவ்வளவுதான். நான் ஆன்மிக நாட்டம் கொண்டவள் என்பது என் நெருங்கிய நண்பர்களுக்கு தெரியும். முடிவைக் காட்டிலும் நடிப்புதான் எனக்கு முக்கியம். நான் நடிக்கிற கதாபாத்திரத்துக்கு நியாயம் செய்கிறேனா என்ற விடயத்தில்தான் பயப்படுவேன். என்னுடைய வேலையை சிறப்பாக செய்துவிட்டு மற்றவற்றை ரசிகர்கள் முடிவுக்கு விட்டுவிடுவேன்.

**தமிழ் ரசிகர்கள் உங்களைப் பற்றி வித்தியாசமாக நினைக்கிறார்களா?**

தெலுங்கில் என்னை எப்படி நினைக்கின்றனர் என்றே எனக்கு இன்னும் தெரியவில்லை. அதனால், தமிழ் ரசிகர்களைப் பற்றியும் தெரியவில்லை. சில நேரங்களில் நான் ஒரு நடிகை என்பதையும் மறந்து சாலையில் இறங்கி நடந்து போவேன். என்னைப் பொறுத்தவரை இது நல்ல விடயம். ஏனெனில், யாரும் என் மீது அடையாளம் குத்த மாட்டார்கள். நான் குறிப்பிட்ட வகையான திரைப்படத்திற்குத் தான் நன்றாக இருப்பேன். ஆனால், திரையில் என்னை மக்கள் பார்க்கும் போது, அது என்ன வகையான படம்



என்பதைவிட என்னை ஒரு நடிகையாக தான் பார்க்கின்றனர். நாயகியாக என்னை முன்னிலைப்படுத்திக்கொள்ள, நடிப்பதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ள கதைகளைத் தமிழில் எதிர்பார்க்கிறேன்.

**படப்பிடிப்பில் இல்லாத போது ராஷியின் வாழ்க்கை எப்படி இருக்கும்?**

நடிகர்களின் வாழ்க்கை விசித்திரமானது, இல்லையா? சில சமயங்களில் நீங்கள் விரும்பியது கிடைக்காது. அது ஏன் என்றும் உங்களுக்கு பல நேரங்களில் தெரியாது. ஆனால், என்னிடம் மாறாத விடயம், என் மீதான என்னுடைய நம்பிக்கை. எந்த வேலை செய்தாலும் அதில் என்னுடைய முழு அர்ப்பணிப்பை கொடுப்பேன். நான் எதற்கும் பயந்தவள் இல்லை. இதுவரை எனது பயணம் நன்றாகவே உள்ளது. இந்த நிலையில் இருந்து நான் ஏன் கீழிறங்க வேண்டும்?

**தமிழ்ப் படங்களில் உங்களுக்கு கவர்ச்சிகரமான கதாபாத்திரங்களே கொடுக்கப்படுகிறதே?**

ஆடை அலங்காரத்தை நான் மிகவும் விரும்புவேன். ஆனால், எனக்கு நடிக்கவும் விருப்பம். முதலில் நான் தெலுங்கில்தான் நடிக்க ஆரம்பித்தேன். அதன்பிறகே தமிழிற்கு வந்தேன். ஆனால், நடிகைகளுக்கென்று நல்ல கதாபாத்திரங்களை இயக்குநர்கள் எழுதுகிறார்களா என்ன, குறிப்பாக வணிக திரைப்படங்களில்? நடிப்பதற்கு எங்களுக்கு இடம் அளிப்பார்களா என எனக்குத் தெரியாது. அதனால், எனக்குக் கிடைத்த பாத்திரத்தில் நன்றாக நடிக்கிறேன். ஒரு சட்டகத்தில் வெறுமனே நின்றுவிட்டுப் போவதை விரும்பவில்லை. எப்போதுமே இந்த மாதிரியான படங்கள் மட்டுமே பண்ணுவேன் என்று ஒரு வட்டத்துக்குள் இருந்துகொண்டு கதைகளை கேட்பதில்லை. எனக்கு கவர்ச்சியான நடிகை, வணிகப் படங்களின் கதாநாயகி போன்ற அடைமொழிகள் தேவையில்லை. அதுக்கும் மேலே பெரிதாக ஏதாவது செய்யவேண்டும் செய்வேன்.

முழு நீள கதாபாத்திரம் கிடைத்தால்தான் மக்கள் என்னைக் கவனிக்கத் தொடங்குவர். அது இன்னும் நடக்கவில்லை. 'இமைக்கா நொடிகள்', 'அடங்க மறு' படங்களில் என் நடிப்பைப் பார்த்த பிறகு, என்னாலும் நன்றாக நடிக்க முடியும் என்பதை இயக்குநர்கள் உணர்ந்திருப்பர். ஒரே மாதிரியான கதாபாத்திரத்தில் நடிப்பது குறித்து எனக்கு பயமில்லை. ஆனால், கூடிய சீக்கிரத்தில் நல்லது நடக்கும் என நம்பிக்கையுடன் காத்திருக்கிறேன்.

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

## EDUCATION

### Review Questions 20-7

➢ **BIOLOGY 12**

(I) Describe the functional and evolutionary importance of "introns".

(II) Describe the role of the hypothalamus in the production of urine?

➢ **PHYSICS 12**

A plane flying horizontally at 800 km/h banks to make a turn as shown below. Determine the radius of the turn?

➢ **CHEMISTRY 12**

(i) Balance the following incomplete red-ox reactions,
Balance the equation in acidic solution

$FeS + NO_3^- + H^+ \rightarrow Fe^{3+} + NO + SO_4^-$

$Cr_2O_7^{2-}(aq) + HCl(g) \rightarrow Cr^{3+}(aq) + Cl_2(g)$

(ii) A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?

☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

### Answers 20-7

➢ **BIOLOGY 12**


(I) Intron sequences direct the synthesis of different proteins and may control gene activity. The splicing process itself may help to regulate the export of mRNAto the cytoplasm.

Introns may allow single gene to direct the synthesis of different proteins. This can occur if the same transcript is processed differently among various cell types in the same organism.

(II) Hypothalamus controls the release of ADH (anti-diuretic hormone). ADH acting on the kidneys and increases the permeability of water in distal and collecting tubules in nephron.

For example, high concentration of salts in the blood sodium signals the posterior lobe of the pituitary to release ADH. As a result more water will be reabsorbed. It leads to less urine is produced.

➢ **PHYSICS 12**




$$F_w \sin\theta = \frac{mv^2}{r} \; ; \quad F_w \cos\theta = mg$$

$$\frac{F_w \sin\theta}{F_g \cos\theta} = \frac{\frac{mv^2}{r}}{mg}$$

$$\tan\theta = \frac{v^2}{rg}$$

$$r = \frac{v^2}{g \tan\theta}$$

If V = 800km/h and θ = 30°

Radius = 8728m

Radius of the turn 9km

➢ **CHEMISTRY 12**

(i) $FeS + 3NO_3^- + 4H^+ \rightarrow Fe^{3+} + 3NO + SO_4^{2-} + 2H_2O$

$Cr_2O_7^{2-}(aq) + 14HCl(g) \rightarrow 2CrCl_3(aq) + 3Cl_2(g) + 2Cl^- + 7H_2O$

$K_2Cr_2O_7 = 0.95 \times 20 = 19g$; n = 0.06mol

moles of HCl = 50/36.46 = 1.3714

Limiting reactant is $K_2Cr_2O_7$

moles of $Cl_2$ produced = 3x 0.06 = 0.18

mass of chlorine = 0.18 x 70.9 = 12.8g

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO **75%** REFINANCE

## MONTHLY SAVING

**$2,409**

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

**$50,000** EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS


**416.298.2777**

**$375 Mo.**

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East, Unit 222 Toronto ON M1S 0C2



PLUS YOU
DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING
DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727


வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
TEAM TITANS
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாங்க, விற்க நட்பான சேவை
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
வருமான வரி சேவை Income Tax e-File
416.288.1548 / 416.729.0955


Coaching • Yoga • Meditation • Healing • Astro Guidance
S&S EVOLVE
Varany Sivathasan
Life Coach • Healer
Yoga & Meditation Instructor
416.875.0553
info@ssevolve.com
Unit 8, 151 Nashdene Court, Scarborough,ON M1V 2T3


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


ROYAL MEDICAL AND
PROFESSIONAL CENTRE
2225 Markham Road, Scarborough
UNITS AVAILABLE FOR SALE
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*


B.J ரெய்லரிங் அன் ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in
Jewellery making and Tailoring
தையல் பயிற்சி மற்றும் ஜுவலரி செய்யும் முறைகள்
கற்றுக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416-720-4472
email: jegathees2007@gmail.com


HOMES & CONDOS FOR SALE
Brock/Rossland - Whitby
For sale
Gas Station
York St/Bremner St - Toronto
$699,900
Condo Apt - 2BR/1WR
Cambray Rd/North St - Kawartha
$369,900
Bungalow -2BR/1WR
1st & 2nd mortgage availabe upto 1Million
Specialized in New Condos & Cottages
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110


www.tamilvanakkam.com
Tamil
VANAKKAM
தமிழ் வணக்கம்
உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்